விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 28 வெள்ளிக்கிழமை (14.10.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 299

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து

## ஜனாதிபதி சந்திரிகா லண்டன் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுக் காலை லண்டன் புறப்பட்டுச் சென்றார். தனிப்பட்ட பயணமாக லண்டன் சென்றுள்ள சந்திரிகா ஒக்டோபர் இறுதி வாரத்தில் மீண்டும் நாடு திரும்பவுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து பரப்புரை செய்வதை தவிர்க்கும் வகையிலேயே கடந்த ஒரு மாதகாலமாக சந்திரிகா தொடர்ந்து வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு வருவதாக சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளன. (ச-4)





முன்னாள் கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன்புறூவ் ஹெவ்டேயை தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்துவரவேற்பதையும், சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டினுடன் தமிழ்ச்செல்வன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# அரசுடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் தயாராகவே உள்ளனர்

## முடிவில் மாற்றமில்லை என்கிறார் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

அரசுடனான நேரடிப்பேச்சுக்களை ஒரு நடுநிலையான இடத்தில் எந்தநேரத்திலும் மேற்கொள்ள விடுதலைப்புலிகள் தயாராகவே உள்ளனர் . எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை ,தளம்பலும் இல்லை, நாம் அதில் உறுதியாகவே உள்ளோம்.

இதேவேளை அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள ஆயுதக்குழுக்களை வெளியேற்றி யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கான பேச்சுக்களை உடனே தொடங்க வேண்டும் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் நோர்வே தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். நேற்று நடைபெற்ற நோர்வேயின் விசேட தூதுவரும் முன்னாள் கண்காணிப்புக் குழு வின் தலைவருமான டொன்புறூவ் ஹெவ்டேயுடனான சந்திப்பினை முடித்துக்கொண்டு பத்திரி கையாளருக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (11 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் சிவகடாட்சத்தின் பூதவுடல் நேற்று தீயுடன் சங்கமமானது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சிவகடாட்சத்தின் பூதவுடல் நேற்று மாலை கோப்பாய் மயானத்தில் தகனம்செய்யப்பட்டது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அவருடைய வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரது இறுதிக்கிரியைகள் நேற்று மாலை 1 மணிக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். குடாநாட்டுப் பாடசாலைகள் அனைத்தும் மாணவர்களின்றி நேற்று வெறிச்சோடியது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கல்வியியலாளர்கள் கொலை செய்யப்படுவதைக் கண்டித்து யாழ் .குடாநாட்டின் பல இடங்களில் வீதிமறியல் போராட்டங்கள் இடம் பெற்றுள்ளன. அத்துடன் குடாநாட்டுப் பாடசாலைகள் அனைத்திலும் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதால் பாடசாலைகள் அனைத்தும் வெறிச் சோடிக்கிடந்தன.

இதேவேளை நேற்றுக் காலையில் இருந்து நண்பகல் வரை கோப்பாய் சந்தியிலும் வேம்படிச் சந்தியிலும் கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி போன்ற இடங்களில் ஒரு (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மத்திய கல்லூரி அதிபரின் இறுதிக் கிரியைகள் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் க.இராசதுரையின் இறுதிக்கிரியைகள் நாளை நடைபெறவுள்ளது. இறுதிக்கிரியைகள் அவரது வீட்டில் நடைபெற்று பிற்பகல் 12 மணிக்கு பூதவுடல் அஞ்சலிக்காக யாழ்.மத்திய கல்லூரியில் வைக்கப்பட்டு அங்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறுவதைத் தொடர்ந்து மாணவர்களின் பான்ட் வாத்திய இசை அணிவகுப்புடன் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்படவுள்ளது. (ச -4)

## வண.பிதா அ.இ.பேணாட் அடிகளார் யாழ்.மக்களுக்கு காத்திரமான அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எமது சமுதாயம் என்ன திசையில், என்ன பாதையில் உருண்டு கொண்டு போகின்றது என்று சிந்தித்து செயற்படுமாறு யாழ் கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக் குழுவின் தலைவர் வண.பிதா அ.இ பேணாட் அழைப்பு விடுத்துள்ளார்.

எம்மத்தியில் இடம்பெறும் கொலைகள் வேறு செயல்கள் குறித்து சிந்தித்து செயல் பட வேண்டியதாக அவர் யாழ்.மக்களை கேட்டுள்ளார்.

கவலைக்குரிய இந்தப் போக்கு ஒரு பாரிய நச்சு வட்டமாக விரிவடைந்து பல உயிர்களை சூறையாடி எமது சமூகத்தை நாசப்படுத்துமுன்னே இது ஒரு முடிவுக்கு வரவேண்டும். இந்த முடிவு தானாக வராது. நாம் ஈடுபட்டு முயற்சி எடுத்தால்தான் இதை முடிவுக்குக் கொண்டுவர முடியும். 1977 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் இருந்து யாழ். பகுதிக்கு வருகை தந்த சமூகச் சேவைப் பெரியார்களின் குழுவில் இருந்த பெரியார் ஒருவர் தமிழ் மக்களோ இளைஞர்களோ ஆயுதம் தாங்குவார்கள் என்று நான் நம்பப் போவதில்லை என்று சொன்னார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர்களின் கொலைக்கு அரசு கடும் கண்டனம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இரண்டு அதிபர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமையை அரசு கண்டித்துள்ளது.கல்வியாளர்கள் கொல்லப்படுவது மன்னிக்க முடியாதது. அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டுமென அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதை தடுப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார். (ச-4)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2349999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.



எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பல்வைத்தியர்களின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் பல் வைத்தியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென அரசாங்க வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும் பல் வைத்தியர்களின் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இந்த நிலைமை காரணமாக எந்த விதமான நவீன சிகிச்சை முறையையும் அரச வைத்தியசாலைகளின் ஊடாக மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கமுடியாது உள்ளதெனச் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 800 அரசாங்க வைத்தியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். குறைந்தபட்சம் 3000பல் வைத்தியர்கள் அரசாங்க வைத்தியசாலைக்கு தேவைப்படுகின்றனர். தற்போது முன்னேற்றகரமான வைத்திய முறைகள் வந்துள்ளன. ஆனால் இவை மக்களைச் சென்றடையவில்லை.

இதற்குக் காரணம் வைத்தியர்களின் பற்றாக்குறையாகும். ஆனால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ற-8)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு மாணவர்களின் பஜனை நிகழ்வு இடம் பெறும். இதில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவிகளும் கரவெட்டி திரு.இருதயக் கல்லூரி மாணவர்களும் பங்குபற்றுவர். (த-35)

# வளம் பெற வாழ்வோம்

வளம்பெற வாழ்வதற்கு எமது மூதாதையர் வகுத்த வழிமுறைகளைக் கைக்கொண்டால் உடல், உள, ஆன்ம வளர்ச்சி பெறலாம். "வைகறைத் துயிலெழு" என்ற மூதுரைக்



கமைய விடியற்காலையில் நித்திரை விட்டெழுந்தால் மனம் தெளிவாக இருக்கும். இந்த நேரத்தில் படிக்கும் விடயங்கள் மனத்தில் நன்றாகப் பதியும். மேலும் நினைவாற்றல் மிகும், சுறுசுறுப்பு உண்டாகும். கடவுள் வணக்கத்திற்கும் வைகறை ஏற்ற காலமாகும்.

"பொய் சொல்லக் கூடாது" என்ற நல்வழிப்படுத்தும் எடுத்துக்காட்டையும்,

"புறஞ்சொல்லல் ஆகாது" என்ற அமுத மொழியையும்,

"போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்'' என்ற நீதிவாசகத்தையும்,

''தெய்வம் நமக்குத் துணை'' என்ற இந்த அருட்செல்வம் நிறைந்த நற்சிந்தனையையும் மனத்தில் உறுதியாக நிலைநிறுத்தி, நம்பிக்கையுடன்

''அவனருளாலே அவன்தாள் வணங்கி'' வாழ்ந்தால் வாழ்க்கை வளம்பெறும்.

வாழ்க்கை வளம்பெறக் கல்வி மிக மிக இன்றியமையாதது. கல்வியில் முன்னேற்றம் பெற நல்ல நூல் பல கல்லுங்கள், கசடறக் கற்றுத் தெளிவுபெறுங்கள், கற்றனைத்தூறும் அறிவு என்னும் ஆன்றோர் அமுத மொழியையும் போற்றுங்கள், ஞானமுங் கல்வியும் நயத்த லரிது என்பதையும் ஆழமாக மனத்தில் பதித்து உடல், உளம், ஆன்மா மூன்றையும் நல்வழியில் செல்ல இயன்ற மட்டும் முயல வேண்டும்.

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'

என்ற ஆன்றோர் கூற்றும் கல்வியின் பிரதானத்தை வலியுறுத்தும்.

மேலும் பின்வரும் ஆன்றோர் அமுதமொழிகளும் கல்வியின் பிரதானம் பற்றி எடுத்துக்கூறுகின்றன.

பொருள் வளம் சேர வாழ்க்கை வளமும் பெருகும். இந்தப் பொருளை ஒருவன் நல்லவழியில் நின்று சேர்த்தல் வேண்டும். இப்படியான பொருள் இம்மை வறுமை இரண்டிற்கும் உதவும். இம்மையில் தோன்றி மறையும் பொருளாக இருந்து அது உதவும், மறுமைக்கு நிலையான அருட்செல்வத்தையும் அது தந்து உதவும். 'தீவினை விட்டீட்டல் பொருள்' என்னும் எடுத்துக்காட்டு நல்வழியில் பொருள் ஈட்டுவதை வலியுறுத்துகிறது.

விடாமுயற்சி பொருள்வளம் பெருக்கும். ''முயற்சி திருவினையாக்கும்'' என்னும் திருக்குறள் தொடர் இதனை வலியுறுத்தும்.

சோம்பல், விடாமுயற்சியின் பகையைத் தேடி உள்ள பொருள் வளத்தையும் நீறாக்கி விடும். "சோம்பல் மிகக் கெடுதி" என்பதும், 'சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்' என்பதும் சோம்பலின் கெடுதியை விளக்குவனவாம்.

வரவுக்குத் தக்க செலவு செய்து வாழ்த்தலும் வாழ்க்கையை வளமுறச் செய்யும் வரவுக்கு மிஞ்சிய செலவு வறுமையைத் தானாகவே வரவழைக்கும்.

இன் சொல்லும் வாழ்க்கையை வளம்பெறச் செய்யும், உலகம் இன் சொலால் மகிழும், செல்வத்திற்குத் தலைவியான திருமகள் உறைவிடமாகவும் இல்லம் திகழும் இதனால் பொருட் செல்வம் மிகுந்து திகழ்ந்து உவகை ஊட்டும்.

கோபம் நெருப்பாகிச் சகலவற்றையும் சுட்டுப் பொசுக்கிப் பாழாக்கும். கோபத்தை அடக்கி வாழ்தல் வேண்டும். பெருகிவரும் வெள்ளத்தைத் தடைகட்டித் தடுத்தல் அரிது, அதுபோல் கோபத்தை அடக்குதல் அரிது. தடைகட்டித் தடுத்து வைத்திருக்கும் தடையாகிய அணையைத் தகர்த்து உடைத்து வெள்ளத்தை வெளியே விடுதல் மிகவும் எளிதாகும். அவைபோல முறையே கோபத்தைத் துலங்கச் செய்ய விடாது இருத்தல் அரிதாகும். கோபத்தைத் துலங்கச் செய்ய விடுவது எளிதாகும். இப்படித் துலங்கி வெளிப்பட்டுத் தொழிற்படும் கோபம் ஒருவனை அல்லலுக்குள் தள்ளித் துன்புறுத்தி வருத்தும். வாழ்க்கையில் வளத்தையே காணவிடாது அழிக்கும் தனிமை கோபத்துக்கு மிகவும் எளிதாகும் வாழ்க்கை வளம் பெறக் கோபத்தை அகற்றி வாழ்தல் வேண்டும்.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்' என்பது பொறுமைக்குரிய சிறப்பை எடுத்துக்காட்டும் சிறந்த அமுத மொழியின் ஓர் அருமை நிறைந்த செய்யுளின் ஒரு பகுதியாகும் பொறுமை உள்ள ஒருவன் சகல இடர்பாடுகளையும் மிகவும் எளிதாக மேற்கொண்டு வெற்றி பெறுவான். அந்த வெற்றி வாழ்க்கையை வளம்பெறச் செய்யும்.

## வெள்ளிநற்சிந்தனை

**க.சி.சண்முகம்**
**கரவை கிழக்கு**

# கொழும்பு கம்பன் கழகம் நடாத்தும் இசை வேள்வி-2005

(கொழும்பு)

கொழும்பு கம்பன் கழகம் ஆண்டுதோறும் நடாத்திவரும் இயல், இசை, நாட்டிய விழா வரிசையில் 2005ஆம் ஆண்டுக்கான 'ஸ்ரீராம நாம கானாமிர்தம்' எனும் பெயரிலான இசைவிழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை முதல் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமைவரை 8 நாட்களுக்கு நடாத்தப்படவுள்ளது.

இவ்விழா கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தினமும் மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 8.30மணி வரை நடைபெறும். இவ் இசை விழாவில் வழமைபோலவே இம்முறையும் ஈழத்து இசைக்கலைஞர்களும் தமிழ்நாட்டின் தலைசிறந்த இசைக்கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முதல் நாள் இசைவிழாவினை கொழும்பு கம்பன் கழகத் தலைவரும் மொறிசியஸ் நாட்டின் இலங்கைக்கான பிரதிநிதியுமான தெ.ஈஸ்வரன் மங்கள விளக்கேற்றியும், முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசரும், கொழும்பு கம்பன் கழகத்தின் பெருந்தலைவருமான மாண்புமிகு சி.வி.விக்னேஸ்வரன் தலைமை தாங்கியும் தொடக்கி வைக்கவுள்ளனர். (து)

## இராசிபலன்

**14.10.2005**
**(புரட்டாதி 28, வெள்ளிக் கிழமை)**
**துவாதசி நள்ளிரவு 12.01 மணிவரை**
**சதயம் முன்னிரவு 10.02 மணிவரை**
**இராகுகாலம் 10.32-12.02 மணிவரை**
**சுபநேரம் 06.02-07.32 மணிவரை**
**சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | கடின உழைப்பு, சுப நிகழ்வு, நல்ல செய்தி, காரிய அனுகூலம். |
| இடபம் | ஆன்றோர் ஆசி, உடல் உழைப்பு, வீண் பயம், புதிய முயற்சி. |
| மிதுனம் | வீண் தொல்லை, பிரயாண பயம், போசன சுகம், காரிய தாமதம். |
| கடகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, பண வருவாய், போசன சுகம், களஸ்திர நன்மை. |
| சிங்கம் | பண வருவாய், திடீர் பயணம், செய் தொழில் விருத்தி, ஆரோக்கியம். |
| கன்னி | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பணக்குறைவு, ரோக நிலை. |
| துலாம் | கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், விரும்பாத உறவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | கூட்டு முயற்சி, இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை. |
| தனுசு | பொருள் விரயம், ரோக நிலை, காரிய தாமதம், கௌரவக் குறைவு. |
| மகரம் | நண்பர்கள் உதவி, புதிய முயற்சி, கற்பனை மிகுதி, சயன சுகம். |
| கும்பம் | பிதா சிந்தை, வீண் அலைச்சல், மனஸ்தாபம், முயற்சி தாமதம். |
| மீனம் | தொழில் சிந்தை, பொருள் வருவாய், மனமகிழ்ச்சி, காரிய தாமதம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

வளவன்

# போர்நிறுத்தத்தை நிரந்தர சமாதானமாக்க அரசும் புலிகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## இல்லையேல் அபி.பணிகள் தாமதமாகும் என்கிறார் ஐ.நா அவசரகால இணைப்பாளர்

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நிரந்தர சமாதானமாக மாற்ற அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செயற்படாவிட்டால் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாட்டை அபிவிருத்தி செய்ய நீண்டகாலம் செல்லுமென்று ஐக்கிய நாடுகளின் சபையின் அவசரகால இணைப்பாளர் ஜான் எக்லன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை மனிதாபிமான உதவிகளை மாத்திரமே வழங்க முடியுமே தவிர அபிவிருத்திக்கான உதவிகளை வழங்க முடியாது எனவும் அவர் தொவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அவசரகால இணைப்பாளர் ஜான் எக்லன் நேற்று முன்தினம் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்.

இலங்கையில் சமாதானம் ஏற்பட்டால் ஒரு சில வருடங்களில் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும்.

நாட்டில் தற்போதுள்ள யுத்தநிறுத்த நடைமுறையை நிரந்தர சமாதானமாக மாற்ற அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் மாத்திரமே கடந்த இரு தசாப்தகால போரினாலும், சுனாமிப் பேரலையினாலும் அழிவடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

## குண்டு வைக்கப்பட்டிருப்பதாக

# அநாமதேயத் தகவல்கள் கொடுப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

குண்டு வைக்கப்பட்டிருப்பதாக அநாமதேயத் தகவலைக் கொடுத்து மக்களை பீதிக்குள்ளாக்குவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுமக்களை அச்சத்திற்குள்ளாக்குவதற்காகத் திட்டமிட்ட குழுவொன்று இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்ட பொலிஸ்மா அதிபர் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோரை கைதுசெய்ய விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அநாமதேயத் தகவல்களினால் நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

எனவே, அவ்வாறான தகவல்களைக் கொடுப்பவர்களை கைது செய்ய பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் பொலிஸ்மா அதிபர் கேட்டுள்ளார். (ற-9)

## இன்று ஒரு தகவல்

# சிறை

ஒருவன் சொன்னான் நான் எனது அப்பாவை விட்டுப் பிரிவதேயில்லை. அவர் எங்கேயிருக்கிறாரோ அங்கே தான் நானும் இருப்பேன்" என்றான். உங்கள் அப்பா எங்கே இருக்கிறார்? என்று கேட்டால் அவர் ஜெயிலில் இருக்கின்றார் என்கிறான். ஜெயிலுக்குப் போனாலும் சேர்ந்தே போய்விட்டு வரும் அளவுக்கு அப்படி ஒரு பந்தம் ! அது இருக்கட்டும்.

இந்தக் காலத்தில் இவர்கள் எல்லாம் ஜெயிலுக்குப் போவது என்றால் ஏதோ மாமியார் வீட்டுக்குப் போய்விட்டு வருவது போல் போய்வருகிறார்கள். ஆனால் அந்தக் காலத்திலெல்லாம் இப்படி முடியாது. ஒரு காலத்தில் ஜெயிலுக்குப் போவதென்றால் பயந்து நடுங்கியவர்களும் உண்டு தெரியுமா? 1403 இல் இங்கிலாந்தில் சிறைச்சாலை ஏற்பட்டது. அது அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் இருந்தது. ஆனால் அதற்கு முன்னால் சங்க காலத்திலேயே தமிழ் நாட்டில் சிறைகள் இருக்கின்றன. அது பற்றி பல குறிப்புகள் உள்ளன.

கணைக்கால் இரும்பொறை சிறையிலிருந்து தண்ணீர் கேட்டு அதைக்கொடுக்காததனால் அவமானம் தாங்காமல் ஒரு பாடல் எழுதி (புறம் 74) இறந்ததாக குறிப்பு உள்ளது. குணவாயில் கோடத்து சிறைவைத்தான் என்று சொல்வார்கள். அந்த வாயிற் கோட்டம் கும்பகோணமாக இருக்க வேண்டும் அல்லது திருச்சி மலைக்கோட்டையாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சிறையில் குற்ற வாளிகளை மிகவும் கஷ்டப்படுத்துவார்கள். அதனால் சிறைக்குப் போவதென்றால் எல்லோருக்கும் பயம். இந்தப்பயம் இருந்தால் தான் மனிதன் தவறு செய்யமாட்டான் என்று நினைத்தார்கள். ஆனால் காலப்போக்கில் கணக்குப் பார்த்தால் குற்றம் குறைவதாகத் தெரியவில்லை. அதனால் பெரிய குற்றத்திற்கு மரணதண்டனையைக் கொண்டுவந்தனர்.

1550 ஆம் ஆண்டின் பின் இங்கிலாந்திலும் இன்னும் சில ஐரோப்பிய நாடுகளிலும் சிறைச்சாலைகளை நிறுவினார்கள். அதற்கெல்லாம் என்ன பெயர் தெரியுமா? **Work house Houses of correction** என்பன. அவற்றின் பெயர். பிச்சைக்காரர்கள், கடன் காரர்கள், குடும்பத்தை தவிக்க விட்டு விட்டு ஓடியவர்கள், சும்மாதிரிபவர்கள் எல்லோரையும் இங்கே கொண்டுவந்து அடைத்து வைப்பது வழக்கம். ஆனால் பெரிய தவறு செய்பவர்களுக்கு இது சரியான இடமாக இல்லை. அதனால் அவர்களுக்காக அதிக பாதுகாப்போடு இருப்பது போல சிறைகள் கட்டினார்கள். இருந்தாலும் எல்லாவிதமான குற்றவாளிகளையும் ஒரே சிறையில் போட்டு அடைத்து வைத்தார்கள். அவர்களுக்கு ஒரு வேலையும் கிடையாது. சரியான சாப்பாடு கிடையாது. சும்மா ஆடு மாடு போல் அடைந்து கிடந்தார்கள்.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் கைதிகள் நல்ல முறையில் நடத்தப்படவேண்டும். சிறைகள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்க வேண்டும் என்ற கூக்குரல் எழுந்தது. அதன் பின் காலப்போக்கில் பலவிதமான சீர்திருத்தங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். இப்போது நிலைமை மிகவும் மாறிவிட்டது. சிறையில் கைதிகள் சும்மா இருக்க வேண்டியதில்லை. அவர்களுக்கெல்லாம் வேலைகொடுக்கிறார்கள். படிக்கலாம்,தொழிற்கல்வி கற்றுக்கொள்ளலாம், வைத்திய வசதி எல்லாம் இருக்கிறது.

சிறைச்சாலைகளை இன்னமும் சீர்திருத்தவேண்டுமென்று எவ்வளவோ யோசனைகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். எல்லாம் எதற்கு? சிறைக்குச் செல்பவர்கள் மனிதாபிமான அடிப்படையில் சீர்திருத்த வேண்டும் என்பதற்காகத்தான். நீண்ட காலத்திற்கு முன்பெல்லாம் குற்றவாளிகளைப் பிடித்து முதலில் ஜெயிலில் அடைத்து விடுவார்கள். வழக்கு விசாணைக்கு வரும் வரைக்கும் அவர்கள் அங்கே தான் இருக்கவேண்டும். விசாரித்து தீர்ப்பு வழங்கினால் உடனே தண்டனையை நிறைவேற்றி விடுவார்கள். தண்டனை என்றால் மரணதண்டனை இல்லாவிட்டால் கசையடி, சித்திரவை, அபராதம் இப்படி ஏதாவது இருக்கும்.

தண்டனைக்காக சிறையில் அடைத்து வைக்கும் பழக்கம் அப்போதெல்லாம் கிடையாது. ராஜா ராணி காலத்தில் ஒரு ராணியை ஒருவன் கடத்திக்கொண்டு போய்விட்டான். உடனே ராஜாவிடம் எல்லோரும் ஓடி வந்து இந்த விடயத்தைக் கூறினார்கள். "கடத்திக்கொண்டு போனவன் எங்கே இருந்தாலும் உடனே கண்டுபிடித்து என் முன்னால் கொண்டு வந்து நிறுத்துங்கள் " என்று உத்தரவிட்டார் ராஜா.

"அவனை என்ன செய்யப் போகிறீர்கள்" என்று கேட்டார் அமைச்சர் " அவனுக்கு என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கப்போகிறேன் என்றார் ராஜா.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வாக்காளர்கள் புத்திக்கூர்மையுடன் வாக்களிப்பது அவசியமானதாகும்

## -ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

வாக்காளர்கள் புத்திக்கூர்மையுள்ளவர்களாக இருப்பது அத்தியாவசியமானது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபிததேரர் தெரிவித்துள்ளார்.

வாக்களிக்கும் போது கிடைக்கும் பிரதி பலன் ஒரு போதும் மாற்றப்படமுடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஓமல்பே சோபித தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் வாக்காளர்கள் புத்திக்கூர்மை உடையவர்களாக இருக்க வேண்டும். நாட்டைப் பற்றிய தெளிவான சிந்தனை உடையவரே நிர்வாகியாக இருக்கவேண்டும் என பிளேட்டோ கூறியுள்ளார்.

புத்திக்கூர்மையுடையவர்களுக்கே வாக்குரிமை வழங்கவேண்டும்.அவ்வாறு இல்லாவிட்டால் வாக்காளர்களை புத்திக்கூர்மையுடையவர்களாக மாற்ற வேண்டியது எமது பொறுப்பு. வாக்காளர்கள் புத்திக் கூர்மையுடன் வாக்களிக்காவிட்டால் அதன் பிரதிபலனை ஒரு போதும் மீள்பரிசீலனை செய்யமுடியாது என்பது தெளிவான உண்மையாகுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

## ரணில் ஆட்சியில் மோசடி;

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் அமைச்சர் மங்கள முறைப்பாடு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப்பீடத்தில் இருந்தவேளை இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் குறித்து விசாரணை நடாத்துமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் அமைச்சர் மங்கள சமரவீர முறைப்பாடு செய்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் குறித்து சாட்சியங்களுடன் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கேள்விப்பத்திர நடைமுறைகளை அனுசரிக்காமல் பிரதமர் காரியாலயத்திற்கு 34 கோடி ரூபாய் செலவில் கணனி உபகரணங்களும் ஆலோசனை சேவைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக ஆணைக் குழுவில் செய்யப்பட்ட முறைபாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக இருந்த பாஸ்கரலிங்கத்தின் அங்கீகாரத்துடன் இதற்கான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றதாகவும் அம் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

# ஜயந்த தனபாலவுக்கு மரண அச்சுறுத்தல்

(கொழும்பு)

அரசாங்க சமாதான செயலகப்பணிப்பாளர் ஜெயந்த தனபாலவிற்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் புலனாய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு ஊடகம் ஒன்று இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இதற்கென ஏற்கனவே பிஸ்டல் குழு உறுப்பினர் ஒருவரும் உளவுப் பிரிவு உறுப்பினர் ஒருவரும் ஈடுபட்டுள்ளதாகவும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் இவ் ஊடகத்திற்கு தெரிவித்திருப்பதாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் ஜெயந்த தனபாலவிற்கு விசேட பொலிஸ் பாதுகாப்பினை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# கல்கிசை நீதிமன்றத்தில் குண்டுப்புரளி

(கொழும்பு)

கல்கிசை நீதிமன்றத்தில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிளம்பிய புரளியினால் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நீதிமன்றத்திற்கு நேற்று முன்தினம் காலை 9.25 மணியளவில் வந்த தொலைபேசி அழைப்பில் காலை 10.30 மணியளவில் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் குண்டு வெடிக்கப்போவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரும் குண்டு செயலிழக்கச்செய்யும் பிரிவினரும் வரவழைக்கப்பட்டனர்.


நீதிமன்றத்தில் இருந்து அனைவரும் வெளியேற்றப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. சந்தேகத்திற்கிடமான எந்தவொரு பொருளும் கிடைக்கவில்லை. அதன் பின்னர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதேவேளை, சில வாரங்களுக்கு முன்னர் புதுக் கடை நீதிமன்ற வளாகத்திலும் குண்டு இருப்பதாகவதந்தி கிளப்பப்பட்டது. அதேபோல விமானத்தில் குண்டு இருப்பதாக இரு முறை புரளி பரப்பப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது. (ற-4)

## உள்ளூராட்சி வார விழா பிற்போடப்பட்டது

இன்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி வார விழா தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் அறிவித்துள்ளார். (அ)











யாழ். மாவட்டத்தில் கல்வியியலாளர்கள் கொலை செய்யப்படுவதைக் கண்டித்து நேற்று யாழ். வேம்படிச் சந்தியிலும், நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக கே. கே. எஸ். வீதியிலும் மாணவ சமூகம் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

(படங்கள்:- ஞா. ஐங்கரன்)

## மீட்புப் பணிகள் மந்தகதியில்

# பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளில் தொற்று நோய்கள் பரவுகின்றன

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பூகம்பத்தால் பாதிக்கப்



பட்ட பகுதிகளில் கொலரா, நிமோனியா போன்ற தொற்று நோய்கள் ஏற்பட்டுள்ளன.

பூகம்பம் ஏற்பட்டு 5 நாட்கள் முடிந்தும் மீட்புக்குழுவினரும், நிவாரணப் பொருட்களும் வந்து சேராததால் மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர்.

முசாபராபாத் நகரில் நிவாரணப் பொருட்களைக் கொண்டுவந்த மீட்புக்குழுவினரை மக்கள் அடித்து உதைத்துள்ளனர். மற்றப் பகுதிகளுக்கு செல்ல வேண்டிய நிவாரணப் பொருட்களை லொறியுடன் பறிமுதல் செய்துள்ளனர்.

பூகம்பம பாதித்த பகுதிகள் மலைகளுக்கு நடுவே அமைந்துள்ளன. எனவே மலைப் பாதைகளின் வழியே அந்தப் பகுதிகளுக்கு செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. நிலச்சரிவு ஏற்பட்டு மலைப்பாதைகள் சேதமடைந்து விட்டன. எனவே ஹெலிகாப்டர்களை பயன் படுத்தி நிவாரணப் பொருட்கள் வழக்கப்பட்டு



வருகின்றன. இதுகூட ஏராளமான கிராமங்களையும் நகரங்களையும் சென்றடைய வில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கிய உடல்களை மீட்காததால் அவை அழுகி தொற்றுநோய் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பூகம்பத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீரின் தலைநகரான முசாபராபாத்தில் கொலரா, நிமோனியா போன்ற தொற்று நோய்கள் ஏற்பட்டுவிட்டன என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

அங்குள்ள மருத்துவமனைகளின் டாக்டர்களில் பலர் பூகம்ப இடிபாடுகளில் சிக்கி இறந்து விட்டதால், நோயாளிகள் சிகிச்சை வசதி இன்றி தவித்து வருகின்றனர். பூகபம்பத்தால் பாதிக கப்பட்ட ஒவ்வொரு கிராமங்கள் மற்றும் நகரங களின் நுழைவு வாயிலில் மக்கள் கூட்டம்கூட்டமாகக் காத்திருக்கின்றனர். (ற)

WORLD NEWS
உலக தரிசனம்

## விரோதத்தை மறக்கவைத்த இயற்கை

# எல்லைக்கோடு தாண்டி மீட்புப்பணி

(ஜம்மு-காஷ்மீர்)



இந்திய இராணுவ வீரர்கள் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு தாண்டி சென்று பாகிஸ்தான் வீரர்களுக்கு உதவி செய்துள்ளனர்.


பூகம்பத்தால் இந்தியா-பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு பாகிஸ்தான் வீரர்கள் தங்கி இருந்த பதுங்குகுழிகள் சேதம் அடைந்தன. ஸ்ரீநகர்-முசாபராபாத் சாலையில் சகோதி அருகே பாதிப்படைந்த பதுங்குகுழியில் இருந்த 10 பாகிஸதான் வீரர்கள் வெளியே வந்து இந்திய இராணுவ வீரர்களிடம் உதவி கோரினர்.

இதையடுத்து அந்தப் பகுதியில் முகாமிட்டு இருந்த இந்திய இராணுவ வீரர்கள் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை தாண்டி சென்றனர். அங்கு சேதமடைந்த பதுங்குகுழியை புதுப்பிக்க பாகிஸ்தான் வீரர்களுக்கு உதவி செய்தனர். இதை கர்னல் ஹேமந்த் ஜொனேஜா உறுதிப்படுத்தினார்.

அவர் இது குறித்துக் கூறுகையில்,

பாகிஸ்தான் வீரர்கள் உதவி கேட்டதால் நமது வீரர்கள் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை தாண்டிச் சென்று பதுங்கு குழியை புதுப்பிக்க உதவி செய்தனர். அதுபோல தாங்தர் பகுதியிலும் உதவி கேட்ட பாகிஸ்தான் வீரர்களுக்கு இந்திய வீரர்கள் உதவி செய்தனர் என்றார்.

இந்திய இராணுவ வீரர்கள் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை தாண்டி சென்றது இதுவே முதன முறை ஆகும். அங்கு கடந்த காலத்தில் இந்திய-பாகிஸ்தான் வீரர்கள் இடையே மோதல், துப்பாக்கி சண்டை போன்றவை நடந்துள்ளன. தற்போது இரு நாடுகளுக்கும் இடையே அமைதிப் பேச்சுவாத்தை நடந்து வருகிறது. இந்த சூழ்நிலையில் பகையை மறந்து இராணுவ வீரர்கள் உதவி செய்துள்ளனர். (ற)



**சீனாவில் உள்ள லான்ஸ்சூ பகுதியில் கடந்த 2003ஆம் ஆண்டு புதையுண்ட நிலையில் இராட்சத டைனோசர் எலும்புக் கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டது. அது சிதையாமல் முழுமையாக இருந்தது. அது த்தற்போது சீரமைக்கப்பட்டு அரும் பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இது 10மீற்றர் நீளமும் 4.2மீற்றர் உயரமும் உடையது.**

# வடக்கு-கிழக்கு மனிதவுரிமை செயலக பிரதிநிதிகளுடன் இயன்மாட்டின் சந்திப்பு





(கிளிநொச்சி)

இலங்கை வான்படையின் உலங்கு வானூர்தி மூலம் நேற்றுக்காலை கிளிநொச்சியைச் சென்றடைந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் இயன் மாட்டின் வடக்கு-கிழக்கு மனிதவுரிமை செயலகத்திற்குச் சென்று அதன் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மானிதவுரிமை செயலகத்தில் யாழ்ப்பாண பிரதிநிதியாக அதன் தலைவர் அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார், கிளிநொச்சி அலுவலகத்தில் கடமைபுரியும் செயலாளர் முனைவர் ந.மாலதி, திருகோணமலைப் பிரதிநிதியாகக் கடமையாற்றும் துணைக் தலைவர் மு.சிவபாலன் உட்பட மனிதவுரிமை செயலகப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ற)

# தமிழ் செய்தித் தகவல் மையம் யாழில் 16 இல் திறந்துவைப்பு

யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் செய்திகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் முகமாகவும் யாழில் 'தமிழ் செய்தித் தகவல் மையம்' ஒன்று நிறுவப்படவுள்ளது.

இல. 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இது இயங்கவுள்ளது. இத் தமிழ் செய்தித் தகவல் மையத திறப்பு விழா எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ் செய்தித் தகவல் மையமானது சுயாதீன செய்தி நிறுவனமாக இயங்கும். இது ஒரு வெளியீட்டு நிறுவனமல்ல. உள் நாட்டு செய்தியு,டகங்களோ அல்லது சர்வ தேச செய்தி நிறுவனங்களோ இந் நிறுவனத்துடன் தொடர்புகொண்டு செய்திகளைப் பெற்றுக்கொள்ளலாம். செய்திகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் ஒரு நிறுவனமாக தொழிற்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மையம் சமகாலத்தின் ஒரு பதிவகமாக செயற்படவுள்ளது சமகாலத்தின் நிகழ்வுகளையும் சமகாலத்தில் வாழும் பிரபலங்களின் கருத்துக்களையும் நிறுவனங்களின் செயற்பாட்டு போக்குகள் தொடர்பான விடயங்களையும் சேகரித்து எதிர்கால சந்ததிக்கு ஒளிவு மறைவின்றி தெரிவிக்கும்.

இந்த செய்தித்தகவல் மையம் ஐந்து உப பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஊடக தகவல் சேகரிப்பு பிரிவு, அரச-அரச சார்பற்ற நிறுவன தகவல் சேகரிப்பு பிரிவு, அரசியல் தகவல் சேகரிப்பு பிரிவு, கல்வி நிறுவன தகவல் சேகரிப்பு பிரிவு மற்றும் தனிநபர் (பிரமுகர்கள்) தொடர்பான தகவல் சேகரிப்பு பிரிவு ஆகிய ஐந்து உப பிரிவுகள் இதில் உள்ளன. இவ் உப பிரிவுகள் தமது துறை தொடர்பான தகவல்களை சேகரித்து இந்த தகவல் மையத்திற்கு உரிய வகையில் வழங்கும.

இதேவேளை, இம் மையம் ஊடகவியலாளரைப் பாதுகாக்கும் முகமாக இயங்கும. ஊடகவியலாளரின் தேவைகள், விருப்பங்களை உலகிற்கு அறிவிக்கும நிறுவனமாக தொழிற்படும. வறிய நிலையிலுள்ள எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களின் படைப்புக்களை ஊக்குவிப்பதுடன் அவர்களின் படைபபுக்களை தாமே முன்நின்று வெளிக்கொணரும் நடவடிக்கையில் ஈடுபடும். உள்நாட்டு ஊடகவியலாளரையும் வெளிநாட்டு ஊடகவியலாளரையும் இணைக்கும் ஒரு பாலமாகவும் இம மையம் தொழிறபடவுள்ளது.

சமூகங்களில் இருண்ட பகுதிகளிலுள்ள மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் வெளிக்கொணர்ந்து தீர்வுகாணும் முயற்சியிலும் இம் மையம் ஈடுபடும். இம் மையத்தின் சட்ட ஆலோசகராக முன்னாள் பாராளுன்ற உறுப்பினரும் குற்றவியல் வழக்குகளின் சட்டத்தரணியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி செயற்படுவார்.

இம் மையத்தின் போசகர்களாக எம்.கோபாலரட்ணம் மூத்த பத்திரிகையாளர், சென்.லிகோரியாஸ் தேவாலய வண. எம்.வி. ஈ.ரவிச்சந்திரன், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.சிவமகாராஜா, யாழ்ப் பாண கூட்டுறவுச் சங்கத்தலைவர் எஸ்.சிறில், ஓய்வு பெற்ற மின்சாரசபை பொறியியலாளர் எஸ்ரி.கணநாதன், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் பி.சிவநாதன் மற்றும் பேராசியர் என்.சணமுகலிங்கம் ஆகியோர் உள்ளனர். (ற)

# வட-கிழக்குப் பகுதிகளிலும் ரணில் தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும், எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேடபாளருமான ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பிரசாரங்களிலும், பொதுக்கூட்டங்களிலும் கலந்துகொள்ளவுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை வவுனியாவிலும் நாளை சம்மாந்துறை, அட்டாளைச்சேனை ஆகிய பகுதிகளிலும், 16ஆம் திகதி கந்தளாய், திருகோணமலை, கிண்ணியா ஆகிய இடங்களிலும் நடைபெறும். பொதுக்கூட்டங்களில ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவுள்ளார். (ற)

# ஆளுமைமிக்க சமுதாயத்தை உருவாக்க ஆசிரியர் அனைவரும் முன்வரவேண்டும்

எந்தக்குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையில் அன்னையினுடைய வளர்ப்பிலும் ஆசிரியர்களின் வழிகாட்டலிலுமே பிள்ளைகள் சிறந்தவர்களாகவும், வாய்மையாளர்களாகவும், பகுத்தறிவுள்ள்வர்களாகவும், சமுதாய மேம்பாட்டிற்கு உழைக்கக் கூடியவர்களாகவும் மிளிர முடியும். இவ்வாறு செயற்படுவதன் மூலம் நாளை ஆளுமைமிக்க சமுதாயத்தை உருவாக்க முடியும் என புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற்ற வாணிவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வேலணைக் கோட்ட கல்வி பணிப்பாளர் சோ.தில்லைநாதன் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில்,

இன்று சமுதாயத்தில் எம்மினத்தின் பாரம் பரிய பண்பாடுகள் சீரழிந்து அன்பு, கருணை, பாசம், தியாக சிந்தனை, தெய்வ நம்பிக்கை எல்லாமே அருகி வன்முறைகள் மேலோங்கிச் செல்கின்ற நிலைமை கண்டு வேதனை அடைகின்றேன். இந்நிலைமை தொடருமானால் நாட்டில் நல்லன நடப்பது கேள்விக் குறியாகிவிடும். இதனைக் கண்டும் காணாதது போல் கண்மூடித்தனமாக கல்விச் சமுதாயம் இருக்கக்கூடாது. இதனை மாற்றியமைக்க ஆசிரியர்களாலும் பெற்றோர்களாலும் கல்வி மான்களாலேயுமே முடியும். இதனைச் செய்ய அனைவரும் முன் வரவேண்டும் என்றார்.

சிவஸ்ரீ சி.மனோகரக் குருக்களின் ஆசியுரையுடன் பாடசாலை அதிபர் ஆசிரியமணி ந.இராசதுரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தீவக வலய அழகியற் கல்விப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீ.இராமச்சந்திரன், ஆசிரிய ஆலோசகர் த.தர்மராசா ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் விசேட நிகழ்ச்சியாக அதிபரின் நெறி யாழ்கையில் 'மாலைக்கு வாதாடிய மைந்தன்' என்ற சிந்து நடைக் கூத்தும் இடம்பெற்றது.

(அ-126)

# முதியோர் சிறுவர் தினவிழா

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் முதியோர், சிறுவர் தின விழா எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி.ப 2.00 மணிக்கு காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம வருந்தினராக காரைநகர் பிரதேச செயலக முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர் க.பாலசிங்கமும், சிறப்பு விருந்தினராக காரைநகர் கலாநிதி தியாகராஜா, மத்திய மகாவித்தியாலய அதிபர் க.குமாரவேலுவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறுவர் முதியோர் தினத்தையொட்டி பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் காரைநகர் பிரதேச பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது.

(த-246)

# 20 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலக சிறுவர், முதியோர் தினவிழாவில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 20 மாணவர்களுக்கு கல்வி அபிவிருத்திப் புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக சிறுவர் முதியோர் தினவிழா பருத்தித்துறை சிவன்கோவில் கலாசார மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் பிரதமவிருந்தினராகவும், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கௌரவ விருந்தினராகவும், வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எ.இர்ராசேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இவ்விழாவில் 20 முதியோர்களும் 36 சிறுவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இவ் விழாவையொட்டி பருத்தித்துறைப் பிரதேசப்பாடசாலைகளின் மாணவ மாணவிகளுக்கிடையே நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

பரதநிருத்தியாஞ்சலி நடனம், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய மாணவர்களின் "மனமாற்றம்" நாடகம் உட்படப் பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. சமூக சேவை அலுவலர் எஸ். இராசலிங்கம் நன்றியுரை நிகழ்த்தினார்.

(ற-52)

# சேமிப்பு மாதமாகப் பிரகடனம்

மக்கள் வங்கி ஒக்டோபர் மாதத்தை சேமிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தியிருப்பதாக மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் து.ரகு தெரிவித்தார்.

இதற்கமைய கடந்த முதலாம் திகதியிலிருந்து நாடு பூராகவுமுள்ள மக்கள் வங்கிக் கிளைகளூடாகவும் 'சேமிப்பு'குறித்த பிரசாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு மக்கள் வங்கிக் கிளைப் பகுதியிலுமிருந்து இரண்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மூலமாகப் பாடசாலைகளிலும், மக்கள் மத்தியிலும் பிரசாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக மாணவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளதாக பிராந்திய முகாமையாளர் ரகு தெரிவித்தார்.

சேமிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் மக்கள் வங்கிக் கிளையினரால் விசேட சேமிப்புக் கரும பீடங்களும் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன.

(ற-49)

# வறிய மக்களுக்கான விசேட திட்டம்

யாழ்.மாவட்டக் கிராமிய உழைப்பாளர் சங்கம் யாழ்.மாவட்டத்திலுள்ள 10 கிராமங்களில் வட்டியில்லாக் கடன் திட்டம், சத்துணவுத் திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

குறித்த 10 கிராமங்களிலும் அன்றாடம் உழைக்கும் வறிய மக்களுக்கே இவ்விரு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ்.மாவட்டக் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் தலைவர் இன்பம் தெரிவித்தார்.

மேற்படி கிராமங்களில் உழைக்கும் வறிய மக்களை இனங்காணுவதற்கான ஆய்வு நடவடிக்கைகளை கிராமிய உழைப்பாளர் சங்கம் தற்போது மேற்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரட்டப்பட்ட ஆய்வுகளின் முடிவில் தெரிவுசெயயப்பட்ட பயனாளிகளுக்கு இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

(ற-49)

# விழிப்புக் குழு

பண்டத்தரிப்பு பெரியவிளான் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கு விழிப்புக் குழு அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதிகளில், மேற்கொள்ளப்பட்டு வந்த இளவாலைப் பொலிஸாரின் துவிச்சக்கர ரோந்துப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதையடுத்து கள்வர் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(த-49)

# வாசிப்புப்பழக்கத்தை ஊக்குவிக்க சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஒக்ரோபர் 2005 தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தினரால் பொது மக்களிற்கிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிப்பதற்காக கட்டுரைப் போட்டிகள், புத்தகக் கண்காட்சி, கொடிதினம் என்பன நடாத்தப்பட்டுவருகின்றது.

எதிர்வரும் ஒக்ரோபர் 18, 19 ஆம் திகதிகளில் சாவகச்சேரி நகர சபை பொது நூலகக் கண்காட்சி ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(து-47,29)

# முதியோரை மதிக்கும் நிலை சமூகத்தில் அருகிச் செல்கிறது

## வடகிழக்கு சமூக நலத்துறைப் பணிப்பாளர் ஆதங்கம்

(சாவகச்சேரி)

தற்போதைய சமூகத்தின் மத்தியல் முதியோரை மதிக்கும் பழக்கம் அருகிச் செல்கின்றது என வடகிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெற்ற சர்வதச முதியோர், சிறுவர், வலுவிழந்தோர் நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இங்கு 7.2சதவீதமாக உள்ள வயோதிபர்களின் தொகை இன்னும் இரண்டு ஆண்டுகளில் 10.2 சதவீதமாக அதிகரிக்கலாம். இங்கு சரியான போக்குவரத்து வசதிகள், மருத்துவம் போன்ற இல்லை. இவ் வயோதிபருக்கு சரியான சமூக பாதுகாப்புத் திட்டம் இல்லை. இதனால் இவர்களை கவனிப்பதற்குப் பல தடைகள் ஏற்படுகின்றன.

கைதடி முதியோர் இல்லத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட, இடிந்த சேதமடைந்த கட்டடங்கள் உண்டு. அவற்றுக்கான நிதியம் உண்டு. ஆனால் விசாரணை என்ற பெயரில் எமக்கு அந் நிதி கிடைக்காமல் காலம் கடத்தப்படுகிறது.

பெற்றோர்களை பிள்ளைகள் இயன்றளவில் தம்முடன் வைத்துப் பராமரிக்கவேண்டும். முதியோர்களை மதிக்கும் நிலை குறைந்து கொண்டே செல்கிறது. இந்நிலை மாறவேண்டும் என்றார்.

(ற-108)

# பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இன்று பி.ப 3.00 மணிமுதல் எதிர்வரும் திங்கட்கிழமை பி.ப 2.00 மணி வரை யாழ்.இராமநாதன் கல்லூரி வளாகத்தில் நடைபெறவிருந்த இலங்கைச் சாரணர் சங்கத்தின் காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் 25 ஆவது வருடாந்த கம்போறியும், கப்போறியும் நிகழ்வுகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன. இந்நிகழ்வு இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(ற-9)


# பருத்தித்துறை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல் - 2005

அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளை நிறைவேற்றுவதற்கு நிரல் 1 இலுள்ள வேலையை நிறைவேற்றுவதற்கு இக்ராட் M8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் நிரல் 2 இலுள்ள வேலையை நிறைவேற்றுவதற்கு இக்ராட் M6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் வேலையின் கேள்விகள் கோரப்படுகின்றன.

படிவ விநியோகம் - 20.10.2005 பி.ப.3.00 மணிவரை
படிவம் ஏற்றல் - 21.10.2005 நண்பகல் 12.00 மணிவரை
படிவம் திறத்தல் - 21.10.2005 பி.ப 2.00 மணி.

| வேலைவிபரம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | படிவக்கட்டணம் | வற்வரி |
|---|---|---|---|
| 1) ஆழியவளைப் பாடசாலை வீதியில் இருந்து குடியிருப்பு வரையானது | 10,000/= | 300/= | 45/= |
| 2) வெற்றிலைக்கேணி மீள் குடியேற்ற உள்ளகவீதி | 67,000/= | 300/= | 45/= |

கேள்விகள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு மூலப்பிரதி - செயலாளர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி என்ற முகவரிக்கும் இணைப்பிரதி - பிரா/உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமோ அல்லது சபையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ குறித்த திகதி, நேரத்திற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சிதம்பரப்பிள்ளை பசுபதி,
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.
11.10.2005

(C/1747)


# சிறுவர் முதியோர் தின போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

சர்வதேச முதியோர் தினப போட்டி முடிவுகள் வருமாறு,

**முதியோர் தினக் கவிதை**

கீழ்ப்பிரிவு
1ஆம் இடம் : க.துவாரகா, ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
2ஆம் இடம் : யோ.ரஞ்சிதா, யாழ்.இந்து மகளிர் ஆ.பாட.
3ஆம் இடம் : ச.ததுசன், நல்லூர் ஞானோதயா வித்தி.

மத்திய பிரிவு
1ஆம் இடம் : த.நாராயினி, கொக்குவில் இந்துக் கல்லூரி.
2ஆம் இடம் : த.ஜதுர்சன், யாழ்.இந்துக் கல்லூரி.
3ஆம் இடம் : சி.நிவோதா, நல்லூர் இந்து த.பெ.பாட.

மேற்பிரிவு
1ஆம்இடம் : ப.ஜெயப்பிரதா, கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தி.
2ஆம் இடம் : பா.பிரமிளா, கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.
3ஆம் இடம் : லோ.றம்யா, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.

உயர் பிரிவு
1ஆம் இடம் : ப.கஜலக்ஸ்மி, கொக்குவில் இந்துக் கல்லூரி.
2ஆம் இடம் : ப.பத்மநிருபா, யாழ்.இந்துக் கல்லூரி.

**முதியோர் தினக் கட்டுரை**

கீழ்ப்பிரிவு
1ஆம் இடம் : இ.சௌமியா, ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
2ஆம் இடம் : ஜெ.ஜெனுசியா, நல்லூர் ஞானோதயா வித்தி.
3ஆம் இடம் : கை.டினோஸன், கொக்குவில் இந்து ஆர.பாட.

மத்திய பிரிவு
1ஆம் இடம் : ந.பிரியங்கா, கொக்குவில் இந்துக் கல்லூரி.
2ஆம் இடம் : க.அனுசாந்தி, நல்லூர் இந்து த.பெ.பாட.
3ஆம் இடம் : கி.அபிலாஸா, கலட்டி மெ.மி.வித்தி.

மேற்பிரிவு
1ஆம் இடம் : வெ.பிரதீபா, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.
2ஆம் இடம் : வி.அனுத்ரிகா, கொக்குவில் இந்துக் கல்லூரி.
3ஆம் இடம் : இ.நீல்ராஜ், கொக்குவில் இந்துக் கல்லூரி.

உயர் பிரிவு
1ஆம் இடம் : ப.கஜலக்சுமி, கொக்குவில் இந்துக் கல்லூரி.
2ஆம் இடம் : வ.கஜேந்திரா, யாழ்.இந்துக் கல்லூரி.


இன்று (வெள்ளிக்கிழமை) பி.ப 2.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறும் சிறுவர், முதியோர் தின விழாவில் இவர்களுக்கான பரிசுகள் வழங்கப்படும் எனவும் பரிசு பெறுவோர் பரிசுகளைத் தவறாமல் பெற்றுக்கொள்ளுமாறும் நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் கே.வி.குணசேகரம் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ற)

## காலமெல்லாம் கோப்பி

நோர்வே நாட்டுக்காரர்களை கோப்பிக்கு அடிமை என்று சொல்லலாம். அவர்கள் தினமும் குறைந்தபட்சம் 7 வேளையாவது கோப்பி குடித்து விடுவார்கள். அவர்களின் வீட்டிற்கு நீங்கள் விருந்தாளியாகப் போனால் உங்களுக்குக் கோப்பை கோப்பையாகக் கோப்பி வந்து கொண்டே இருக்கும். அந்தளவிற்குக் கோப்பி கொடுத்து உபசரிப்பார்கள்.

நீங்கள் பதில் உபசரிப்பின்போது உங்கள் வீட்டில் கோப்பி கொடுக்க மறந்துவிட்டீர்கள் என்றால் அவ்வளவுதான் கோபித்துக்கொண்டு அதை உடனடியாகச் சுட்டிக்காண்பித்து விடுவார்கள். அந்தளவிற்கு அவர்களுக்கு கோப்பி மோகம் அதிகம். நோர்வே நாட்டில் சராசரியாக ஒரு நபர் வருடத்திற்கு 11 கிலோ கோப்பித் தூளை கோப்பி குடிப்பதற்காகப் பயன்படுத்துகிறார்.




இவர்களின் பக்கத்து நாட்டவர்களான பின்லாந்துக் காரர்களும் கோப்பி விஷயத்தில் லேசுப்பட்டவர்கள்அல்ல. இவர்களின் வருடாந்திர உபயோகம் ஒரு நபருக்கு 10 கிலோ. மூன்றாமிடத்தில் இருக்கும் டென்மார்க் நாட்டவர்கள் பயன்படுத்துவது 9.7 கிலோ. இதில் உலக மக்களின் சராசரி 3.26 கிலோ.

## கண்ணுக்குத் தெரியாத 'மைக்ரோ ரோபோ'

'பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்' என்றான் ஒரு கவிஞன். இந்தக் கவிதையைப் புதுவிதமாக 'ரோபோக்கள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்' என்று சொல்லலாம். அந்தளவுக்கு ரோபோக்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகின்றது. ஒவ்வொரு ரோபோவும் வெவ்வேறு பயன்களுக்காக வடிவமைப்பு செய்யப்படுகின்றன. வீட்டு வேலைகளைச் செய்யும் ரோபோ, தோட்டங்களில் மற்றும் வயல்வெளிகளில் வேலை பார்க்கும் ரோபோ, பாதுகாப்புத் துறைகளில் பயன்படும் ரோபோ, மருத்துவ துறையில் அறுவைச் சிகிச்சைக்காக உருவாக்கப்பட்ட ரோபோ, கால் பந்து விளையாடும் ரோபோ என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

ரோபோக்களுக்கு உள்ள பிரபலத்தைப் பார்த்து வெளிநாடுகளில் ரோபோக்கள் கண்காட்சியும் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. இந்தக் கண்காட்சியில் வெவ்வேறு நாடுகளில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட நவீன ரோபோக்கள் இடம் பெறுகின்றன. இந்தக் கண்காட்சி பெரியவர் முதல் சிறியவர் வரை அனைத்துத் தரப்பினரையும் கவரும் விதத்தில் இருக்கும் என்பதில் ஐயமில்லை.




தற்போது கணனி அனைத்துத் துறைகளையும் ஆக்கிரமிப்பு செய்வதைப் போல வருங்காலங்களில் ரோபோக்கள் அனைத்து துறைகளையும் ஆக்கிரமிப்புச் செய்யலாம். அந்தளவுக்கு விஞ்ஞானிகள் ரோபோக்கள் கண்டுபிடிப்பில் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

கைகளில் மறைத்துக்கொள்ளும் சிறிய ரோபோ முதல் பார்ப்பவரை பயமுறுத்தும் இராட்சத ரோபோ வரை உருவத்திற்கு ஏற்ப ரோபோக்களின் வடிவம் மாறுபடுகின்றது. தற்போது விஞ்ஞானிகள் புதுவிதமான ரோபோ ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர். கண்ணுக்கே தெரியாத மைக்ரோ ரோபோதான் அது.

கம்பளிப் புழுவைப் போல தோற்றம் கொண்டது இந்தப் புது மைக்ரோ ரோபோ. இந்த ரோபோவை சாதாரணமாக பார்க்க முடியாது. நுண்ணோக்கி மூலமே காணமுடியும். அந்தளவிற்கு மிகச் சிறியது. இதன் பருமன் எவ்வளவு தெரியமா? 60 மைக்ரோ மீற்றர். அதாவது முடியின் பருமன் அளவுதான் இருக்கும். நீளம் 250 மைக்ரோ மீற்றர்.

இவ்வளவு சிறிய மைக்ரோ ரோபோவை வடிவமைத்தவர் பிரபல பல்கலைக்கழகங்களில் ஒன்றான டாரட் மவுத் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானி புரூஸ் டொனால்டு. இவர் தமது கண்டுபிடிப்பு பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

'எனக்கு ரோபோ வடிவமைப்பில் ஆர்வம் அதிகம். அதிலும் வித்தியாசமாக கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் வெகு நாட்களாகவே இருந்து வருகின்றது. அப்படி உருவாகியதுதான் இந்த மைக்ரோ ரோபோ. இதன் அளவு மிகவும் மெல்லியதாக இருந்தாலும் இதனைக் கட்டுப்படுத்த இயலும். மேலும் இருந்த இடத்தில் இயக்கவும் முடியும். இந்த ரோபோ ஒரு புழுவைப் போல தோற்றம் கொண்டது. புழுபோல மெதுவாக ஊர்ந்து செல்லும் தன்மை கொண்டது. புழுவுக்கு எப்படி கால்கள் கிடையாதோ அதே போல் இந்தப் புழு ரோபோவுக்கும் சக் கரம் கிடையாது. இதன் வேகம் எவ்வளவு தெரியுமா? வினாடிக்கு 1 நானோ மீற்றர் (ஒரு நானோ மீற்றர் என்பது ஒரு மீற்றர் தூரத்தில் 100 கோடியில் ஒரு பங்கு).

இந்த ரோபோவின் சிறப்பம்சம் என்ன வென்றால் மிகவும் சிக்கலான வளைவு நெளிவுகளில்கூட சாதாரணமாக ஊர்ந்து செல்லும் தன்மை கொண்டது. மேலும் இதனுடன் எந்தவிதமான மின் இணைப்புகளோ, வயர்களோ தேவையில்லை' என்று கூறினார்.


'இது நவீன தொழில்நுட்பத்துடன் உருவாக் கப்பட்டது. மிகவும் நுண்ணிய இடங்களில் தவழ்ந்து செல்லும் தன்மை கொண்டதால் மிக நுட்பமான ஆராய்ச்சிகளுக்கு இந்த ரோபோவைப் பயன்படுத்தலாம்.

நீங்கள் எங்காவது வெளியில் சென்று வந்தாலோ அல்லது மணலில் உங்கள் கால் பட்டிருந்தாலோ காலில் உள்ள சிறு தூசிகள் மற்றும் மணல்களைச் சுத்தம் செய்துவிடும். மேலும் இதில் பொருத்தப்பட்டுள்ள நுண் முனைப்பி ரோபோவை வளைந்து நெளிந்து செல்ல உதவி செய்கின்றது. மேலும் இதனை இயக்க கணனி தேவையில்லை. மாறாக மின்முனைச் சட்டங்களில் விடுக்கப்படும் ஆணைக்கு ஏற்ப இந்த ரோபோ செயல்படுகின்றது. இந்த ரோபோ செயல்பட தேவையான மின்சாரம் மின்முனைச் சட்டங்களில் இருந்து ரோபோவுக்குக் கிடைக்கின்றது என்கிறார் இந்த ஆய்வில் ஈடுபட்ட மற்றொரு விஞ்ஞானி கிரேய்க் மெக்கிரே.

## குஞ்சுகளைச் சுமக்கும் எலி

அமெரிக்காவில் ஒபோசும் என்ற ஒரு வகை எலி காணப்படுகின்றது.

இது தன் குஞ்சுகளைத் தன் முதுகிலேயே சுமந்து செல்கிறது. ஒரேசமயத்தில் பத்து எலிக் குஞ்சுகளை இது சுமந்து செல்லுகிறது. எலிக் குஞ்சுகள் தன் தாயாரின் உடலில் தங்கள் வாலைச் சுருட்டி வைத்துக்கொள்ளுகின்றன.



## நீரிழிவு ஏன்?


மனிதனைத் தாக்கும் நோய்களில் நீரிழிவு நோயும் கொடியதுதான்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாவதை நம் கண்கூடாகவே பார்க்கிறோம்.

நீரிழிவு ஏன் ஏற்படுகிறது என்பதற்கு இஸ்ரேல் நாட்டில் உள்ள வெய்ஸ்மான் என்ற பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் புதிய தகவல் கிடைத்துள்ளது.

அதாவது லெப்டின் என்ற புரோட்டீன் அதிகமாவதன் காரணமாக எடை குறைதல் ஏற்படுகிறது. அதன் காரணமாக இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும் இன்சுலின் செயல்பாடுகள் சீரழிந்து நீரிழிவு போன்ற தொந்தரவுகள் ஏற்படுவதாகக் கண்டுபிடித்துள்ளனர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-75




*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 75**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப்பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................
..............................

இங்கே வெட்டுக ------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)கௌரவர்களில் மூத்தவன். (5)சேமிக்கும் இடம் (குழம்பி வருகிறது). (6)பறவைகளின் வதிவிடம். (8)இது கண்ட நரி என்பார்கள். (10)மைதானம் (குழம்பி வருகிறது) (11) ஐந்நிலங்களில் ஒன்று (திரும்பி வருகிறது).

### மேலிருந்து கீழ்

(1)இந்தியாவின் புண்ணிய நதிகளில் இதுவும் ஒன்று. (2)எழுத்து (கீமே). (3)முனிவர். (4)உடம்பில் வளைவு ஏற்பட்டால் இப்படித்தான் சொல்வார்கள் (கீ.மே). (7)படைக்குப் பிந்து இதற்கு முந்து என்கிறார்கள் (குழம்பி வருகிறது). (9)கிரீடம் இப்படியும் அழைப்பர்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 73 இன் விடைகள்**

### இடமிருந்து வலம்

1.சுப்ரபாதம் 4.திலகம் 7.யாகம் 9.பம்பாய் 10.சதி 11.கும்பகோணம்

### மேலிருந்து கீழ்

1.சுத்தம் 2.பாரதி 3.கடம் 5.பாலம் 6.கபடம் 8.சங்கம் 9.கோலம்.

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்


| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | அ.செல்வி<br>59, கண்ணாபுரம்,<br>யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | :- | தி.தர்மதுரை,<br>புகையிரநிலைய வீதி,<br>கோண்டாவில். |
| மூன்றாம் பரிசு | :- | கி.கனகசபாபதி<br>வடலித்தோட்டம்,<br>புலோலி மத்தி,.<br>தம்பசிட்டி. |

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

ஏ.கபர்த்தன், அரியாலை. யோ.சிவாஜினி, சாவகச்சேரி. வே.குமாரசுவாமி, கரவெட்டி. பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. ப.சிவசூரியர், சங்கானை. து.நக்கீரன், மல்லாகம். வி.அருண், யாழ்ப்பாணம் S.திவ்வியசச்சி, சித்தன்கேணி, S.நித்தியா, யாழ்ப்பாணம், வி.இளங்கோ, கோப்பாய். N.நட்சத்திரா, நல்லூர். பா.பிரியா, கோண்டாவில். து.பிரதீபன், வடமராட்சி. தி.துஷ்யந்தி, சாவகச்சேரி. வி.தர்ஷன், மல்லாகம். த.விஷ்ணுஜா, இணுவில்.

**நீங்கள் இந்தப் பூமியில் பிறந்ததன் அர்த்தம் பூர்த்தியாக வேண்டுமென்றால் அடுத்தவருக்கு உதவி செய்யுங்கள். அது முடியாவிட்டால் கூடப் பரவாயில்லை. ஆனால் எவரையும் புண்படுத்திவிடாதீர்கள்.**

# சுப்ப சீரிஸ் டெஸ்ட் போட்டியில் சுழற்பந்து வீச்சே பிரகாசிக்கும்



உலக லெவன் அணி - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 6 நாள் கொண்ட டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இப்போட்டியில் சுழற்பந்து வீச்சு இப்போட்டியை காண்பவர்களின் ஆர்வத்தை அதிகிக்கச் செய்யும் என்று இரு அணிகளதும சுழற்பந்து வீச்சாளர்கள் நேற்றுமுன்தினம் கூட்டாக செய்தியாளர்களுக்கு பேட்டி அளிததுள்ளனர். ஷேன் வேண், முரளீதரன், டானியல் விக்றோரி ஆகியோரே இவ்வாறு பேட்டியளித்துள்ளார்கள்.

இதன் போது அவுஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வேண் கருத்து தெரிவிக்கையில், உலகில் சிறந்த சுழற்பந்து வீசசாளர்களின் செயற்பாட்டை இந்தப் போட்டியல் காணலாம். அத்துடன் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக துடுப்பாட்ட வீர்கள் ஆடுவதையும் ரசிகர்கள் பார்வையிடமுடியும் எனவும் தெரிவித்தார்.



இலங்கை அணியன் சுழற்பந்து வச்சாளர் முத்தையா முரளீதரன் கூறுகையில் அவுஸ்திரேலியாவில்கடந்த 10 ஆண்டுகளாக நான் டெஸ்ட் போட்டியில் விளையாடியது இல்லை. எனவே இந்தப் போட்டியில் சிறப்பாக ஆட வேண்டிய பெரிய சவால் எனக்கு உள்ளது எனவும் அத்துடன் நான் இரு டெஸ்ட் போட்டியில் மட்டுமே இங்கு விளையாடி உள்ளேன். அதில் மூன்று வக்கெற்றுக்களையும் 300 ஓட்டங்களையும் எடுத்தேன் எனவும் தெரிவித்தார்.

நியூசிலாந்து அணி சுழற்பந்து வீச்சாளா விக்றோரி கூறுகையில், இப்போட்டியை அதிக எதிர்பார்ப்புடன எதிர்நோக்கவுள்ளேன். நியூசிலாந்து அணி அவுஸ்திரேலியாவில் டெஸ்ட் போட்டியில் விளையாடி நீண்டநாட்கள் ஆகிவிட்டது எனவும தெரிவித்தார். (அ-19)

# ஐ.சி.சி இரட்டை விருதுகளை வென்ற கலிசுக்கு தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை புகழாரம்

ஐ.சி.சி இரட்டை விருதுகளை வென்ற ஜக்ஸ் கலிசை தென் ஆபிரிக்க கிரிக்கெட சபை புகழந்து அவர் நாட்டுக்குக் கிடைத்த மகத்தான சொத்து என வர்ணித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) விருதுகள் கடந்த 11ஆம் திகதி வழங்கப்பட்டன. சிறந்த டெஸ்ட் இந்த ஆண்டின் சிறந்த வீரர் (பிளிண்ரொப்புடன் இணைந்து) விருதுகளை கலிஸ் அள்ளிச் சென்றார்.

அவுஸ்திரேலிய வீரர்களின் சவாலை சமாளித்து விருது வென்றது குறித்து தென் ஆபிரிக்கா கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி ஜெரா ல்டு மயோலா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி விருதுகளில் தென் ஆபிரிக்காவின் ஆதிக்கத்தைக் காண முடிந்தது. குறிப்பாக கலிஸ் இரு விருதுகளை தட்டிச்சென்றார். அவுஸ்திரேலியாவின் மெக்ராத், ஷேன் வோர்னை மிஞ்சி சிறந்த விருது வென்றது சிறப்பம்சம். இது டெஸ்டில் கலிஸ் சாதனைக்குக் கிடைத்த சரியான அங்கீகாரம்.

துடுப்பாட்டம், பந்து வீச்சாளர் களத்தடுப்பு எனக் கிரிக்கெட்டின் அனைத்து துறைகளிலும் கலக்கலாக செயல்பட்டார்.




இதற்காக ஆண்டின் சிறந்த வீரர் விருதையும் பெற்றார். இவரால் தென் ஆபிரிக்க கிரிக்கெட் பெருமை கொள்கிறது. 10 ஆண்டுகளுக்கும் மேலாக அணியின் முன்னணி வீரராக திகழ்கிறார். இவர் அணி நாடடுக்கு கிடைத்த மிகப் பெரிய சொத்து. இதே போல் இளம் சிமித் உலக டெஸ்ட் அணியில இடம்பிடித்துள்ளார்.

புதுமுக வீரருக்கான பட்டியலில் டிவிலியர்ஸ் இரண்டாம் இடம்பெற்றார். அம்பயர் ரூடி குயர்ட்சன் முதல் மூனறு இடங்களுககுள் இடம்பெற்றார்.

இது தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி சரியான பாதையில் செல்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்று ஜெரால்டு மயோலா தெரிவித்தார். (அ-19)

# தாய்லாந்து ஓபன் ரென்னிஸ் சானியா சோடி வெற்றி




முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றுள்ள தாய்லாந்து ஓபன் ரென்னிஸ் போட்டி அந்நாட்டின் தலைநகரான பாங்கொங்கில நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் இந்தியாவின் 'இளம் புயல்' சானியா மிர்சா பங்கேற்று விளையாடி வருகிறார்.

இதன் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் சானியா இஸ்ரேல் வீராங்கனையான சர்பீருனுடன இணைந்து ஆடினார். இந்த சோடி, அமெரிக்காவின் குவிக்சன், அப்பி கேலி சோடியை எதிர்த்து ஆடியது.

இந்த ஆட்டத்தில் சானியா சோடி 6-2,7-6 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் சானியா சோடி 2ஆவது சுற்றுக்கு முன்னேறியது. ரென்னிஸ் தர வரிசையில 31ஆவது இடத்தில் இருக்கும் சானியா ஒற்றையர் பிரிவிலும் ஆடி வருகிறார்.

தாய்லாந்து ஓபன் ரென்னிஸல் ஒற்றையர் பிரிவில் இன்று 2ஆவது சுற்று ஆட்டங்கள் நடைபெறுகிறது. இதில் சானியா, சீன வீராங்கனை மெங்யனை எதிர்கொள்கிறார். மெங்கு தர வரிசையில் 186ஆவது இடத்தில் உள்ளார். இதனால் சானியா இந்த ஆட்டத்தில் எளிதில வெற்றி பெறுவார் எனத் தெரிகிறது. (அ-19)



ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடந்து வரும் கிரம்ளின் கோப்பைக்கான மகளிர் ரென்னிஸ் போட்டியில் 6-1, 7-5 என்ற நேர் செட்களில் இத்தாலியின் சில்வியா பரினா எலியாவை வீழ்த்திய ரஷ்ய வீராங்கனை டினாரா சபினாவையும், இத்தாலியின் பெனிட்டாவை வென்ற பிரான்சின் மேரி பியர்சையும் படங்களில் காணலாம்.

# 2011 உலக கோப்பை கிரிக்கெட் இந்தியாவில் நடைபெற வாய்ப்பு

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியை கடந்த 1987, 1996ஆம் ஆண்டுகளில இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து நடாத்தின. 2007ஆம் ஆண்டுக்கான உலக கோப்பை மேற்கிந்தியத் தீவில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் 2011ஆம் ஆண்டுக்கான உலக கோப்பை போட்டியை நடத்த இந்தியக் கிரிக்கெட் சபை முயற்சித்து வருகிறது. முன்பு போல் பாகிஸ்தான் மற்றும் இலங்கையுடன் இந்தப் போட்டியை நடத்தவும தயார் என்று அறிவித்துள்ளது.

சிட்னியில் கடந்த 11ஆம் திகதி நடந்த ஐ.சி.சி நிர்வாக குழுக் கூட்டத்தில் 2011 ஆம் ஆண்டுக்கான உலகக் கோப்பைப் போட்டியை யார் நடத்துவது என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. இந்தப் போட்டியை இணைந்து நடத்த அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் முயற்சித்து வருகின்றன.

எனினும் கிரிக்கெட் விளையாடும் நாடுகள் ஆசியாவில் அதிகம் இருப்பதால் இந்தப் போட்டியை இந்தியாவுக்கு ஒதுக்க ஐ.சி.சி முடிவு செய்துள்ளதாக தெரியவருகிறது.

எனினும் இதுபற்றி இறுதி முடிவு அடுத்த ஆண்டு இலண்டனில் யூன்மாதம் நடைபெறவுள்ள ஆண்டுக்கூட்டத்தில் தான் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று ஐ.சி.சி தலைவர் இசன் மணி தெரிவித்துள்ளார். (அ-19)

## விளையாட்டு செய்திகள்

# சுப்ப சீரிஸ் டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம் பெறப்படும் நிதி பாகிஸ்தான் பூகம்பத்திற்க

உலக லெவன் - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான சுப்ப சீரிஸ் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இரு அணிகள் இடையே 3 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரை அவுஸ்திரேலியா 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த நிலையில் இரு அணிகள் மோதும் 6 நாள் கொண்ட ஒரு டெஸ்ட் போட்டி இன்று சிட்னி நகரில் தொடங்குகிறது. இதில் அவுஸ்திரேலிய அணிக்கு பொண்டிங் கப்டனாகவும், உலக லெவனுக்கு தென்னாபிரிக்க வீரர் சிமித் கப்டனாகவும் உள்ளனர்.

ஆஷஸ் தொடரை தோற்றாலும் நம்பிக்கையுடன் ஆடி உலக லெவனுக்கு எதிராக ஒருநாள் தொடரை வென்று தனது அசுர பலத்தை மீண்டும் நிருபித்துள்ளது பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி. அந்த அணிக்கு மேலும் பலம் சேர்க்கும் விதமாக இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் அணியில் ஹைடன் சேர்க்கப்பட்டுள்ளார்.

உலகின் முன்னணி வீரர்கள் பலர் இடம் பெற்றும் ஒருநாள் தொடரை உலக லெவன் அணியால் வெற்றி பெறமுடியவில்லை. இதனால் அந்த அணி டெஸ்ட் போட்டியில் சிறப்பாக ஆடவேண்டிய நிலையில் உ[illegible]

பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் [illegible] இறங்குவதால் துடுப்பாட்டத்தில் சற்று கூடுதல் பலம் கிடைக்கும்.

இந்த நிலையில் இப்போட்டியின் மூலம கிடைக்கும் 2 கோடி ருபாவை பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்துக்கு நிதி உதவியாக வழங்குவதாக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அதேசமயத்தில் பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் அக்தர் தங்கள் நாட்டில் ஏற்பட்ட பூகம்பத்துக்கு சிறப்பு போட்டி ஒன்றை நடத்தி அதன்மூலம் நிதி திரட்ட வேண்டும் என ஐ.சி.சிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று தொடங்கும் உலக லெவன்-அவுஸ்திரேலிய இடையேயான டெஸ்ட் போட்டி இலங்கை நேரப்படி காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

இரு அணி வீரர்கள் விபரம் வருமாறு:

அவுஸ்திரேலிய அணியில் பொண்டிங் (கப்டன்), ஹைடன், லாங்கர், கில் கிறிஸ்ட், கடிச், கிளார்க் ரொப், பவுச்சர், பொலக், ஹர்மிசன், அக்தர், முரளீதரன், விக்றோரி ஆகிய வீரர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (அ-19)

2004-2005 ஆம் ஆண்டிற்கான சிறந்த வீரர்களாக தேர்வு செய்யப்பட்ட இங்கிலாந்தின் பிளிண்ரொப்பும், தென்னாபிரிக்காவின் கலிசும் ஒருவரையொருவர் பாராட்டிக் கொள்கின்றனர்.



# ஆசியக் கோப்பை ஒரே பிரிவில் இந்திய - பாக் அணிகள் மோதும்

ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரே பிரிவில் இடம்பெற்றுள்ளன.

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டிகள் பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடககவுள்ளது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஐக்கிய அரபு நாடு, ஓமான் ஆகிய நாடுகள் பங்கேற்கவுள்ளன. இந்தப் போட்டிக்கான கால அட்டவணையை ஆசிய கிரிக்கெட் சபை மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நேற்று முன்தினம் வெளியிட்டது.

'ஏ'பிரிவில் இலங்கை, பங்களாதேஷ், ஐக்கிய அரபு நாடு ஆகிய அணிகளும் 'பி' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், ஓமான் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெறுகிறது. அடுத்த சுற்றில் 4 அணிகளும் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. இதில முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறுகிறது. போட்டிகள் பெப்ரவரி 16ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறும் இந்தியாவும், பாகிஸ்தானும் கராச்சியில் பெப்ரவரி 18இல் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-19)

# தீராத நோய்களையும்

**அன்றாடச் சமையலில் நாங்கள் சேர்க்கும் உப உணவுப் பதார்த்தங்கள் அத்தனையும் மருத்துவ சக்தி மிக்கன என்பதை நாம் அறியாமல் இருக்கிறோம். அந்த வகையில் வெங்காயமும் ஒன்று. சகாய வீலையிலும் தட்டுப்பாடு இன்றயும் வெங்காயத்தைப் பெறமுடிவதால் அதை நாம் சாதாரண பெருளாக நினைத்து வருகிறோம். 'சர்வரோக நிவாரணி' எனக் கூறும் அளவுக்கு வெங்காயத்தில் மருத்துவ குணங்கள் நிறைய இருக்கின்றன என்பதை விளக்குவதே இக் கட்டுரை.**

ஈ.வெ.ரா.பெரியாரின் பிரியமான வசவுச் சொற்களில் ஒன்று 'வெங்காயம்'. "உரிச்சுப் பார்த்தால ஒன்றுமேயில்லை" என்ற சித்தர் பாடலில் இதை உதவாக்கரையாகச் சொல்லியதுண்டு.

ஆனால் வெங்காயம் ஒன்றுமேயில்லாத உதவாக்கரை அல்ல. நம் வீட்டுச் சமையலில் வெங்காயம் சேராத கறிவகைகள் எதுவுமேயில்லை. சாம்பார், அவியல், துவையல், குழம்பு என எல்லாவற்றிலும் வெங்காயம் இல்லையென்றால் சுவையேயில்லை.

சின்ன வெங்காயம், பெரிய வெங்காயமென வெங்காயத்தில் இரண்டு வகை உண்டு. பெரிய வெங்காயத்தில் சிவப்பு, மஞ்சள், வெள்ளை என மூன்று நிறங்கள் இருக்கின்றன. எல்லா வெங்காயமும் நல்லவைதான். வெங்காயம் அடிப்படையில் அந்தச் செடியின் கிழங்கு, அதோடு வெங்காயப் பூ, தாள், விதை என எல்லாமே சாப்பிட உகந்தவை. குறிப்பாக சின்ன வெங்காயம் மருத்துவக் குணம் நிறைந்தது.

வெங்காயம் உடம்புக்குச் சூடு. ஆனால் உடம்புக்குப் பலம் தரும். சீரணமாகத் தாமதமாகும். ஆனால் பசியைத் தூண்டும். பச்சை வெங்காயம் இலேசான காரமும் இனிப்பும் கலந்த சுவை கொண்டது. ஆனால் சமைத்தபின் தன் காரத்தன்மையை இழந்து இனிக்கிறது.

சிறுநீரை அதிகரிக்கும் குணம் வெங்காயத்துக்கு உண்டு. நீர்ச்சுருக்கு ஏற்பட்டு உடல் பாதிக்கப்படுவதை வெங்காயம் தடுக்கிறது. அதோடு உடலின் கழிவுகளைச் சிறுநீர் சுத்திகரித்து வெளியேற்ற இது உதவுகிறது. சளியை அகற்றும் சக்தியும் வெங்காயத்துக்கு உண்டு.

வெங்காயத்தைப் பற்றி ஏகப்பட்ட நம்பிக்கைகள் இந்தியாவில் உண்டு. சமஸ்கிருதத்தில் இதற்கு 'கந்தர்வா' என்று பெயர். காமதேவனான மன்மதனின் புனைபெயா இது. மன்மதன் காம அம்பெய்து இன்ப உணர்ச்சிகளைத் தூண்டி விடு கிறான என்பது ஒரு நம்பிக்கை. இந்த மன்மதனுக்கு இணையானது வெங்காயம். இதை நிறையச் சாப்பிட்டால் மன்மதன் அம்பு எய்த மாதிரியான விளைவு கிடைக்கும்.

இந்தியப் பழங்குடி இனமக்கள் தங்கள் வீட்டு வாசலில் காட்டுக் கொடிகளில் வெங்காயத்தைக கட்டித் தொங்கவிட்டிருப்பார்கள். பேய், பிசாசுகள் வீட்டுக்குள் நுழைய முயன்றால் வெங்காயம் அவற்றை அடித்துத் துரத்திவிடுமாம். அவர்களைப் பொறுத்தவரை வெங்காயம் கடவுள்.

இன்னும் சிலருக்கு வெங்காயம் எதிர்காலத்தை உரைக்கும் தீர்க்கதரிசி. தலையணைக்கு அடியில் வெங்காயத்தை வைத்துக் கொண்டு தூங்கினால் நிறையக் கனவுகள் வருமாம். அந்தக் கனவுகள் எல்லாம் நம் எதிர்கால வாழ்க்கையைப் பற்றியதாக இருக்குமாம். வரப்போகும் ஆபத்துக்கள், பெறப்போகும் செல்வங்கள் என எல்லாம் கனவில் வெட்ட வெளிச்சமாகத் தெரியுமாம். இப்படி ஒரு நம்பிக்கை.

நீளமான தாடி போல வாலும் உச்சியில் குடுமி போன்ற அமைப்பும கொணடதால் கிட்டத்தட்ட இதை முற்றும் துறந்த முனிவர் அளவுக்கு நினைத்து மக்கள் தங்கள் நம்பிக்கை எல்லையை அகலமாக்கி விட்டார்கள் போலும்.

ஆனாலும் வெங்காயம் ஓர் அற்புதமான மருந்து. வெங்காயச் சாறு 'அனடி செப்டிக்' ஆக முன்னர் பயன்டுத்தப்பட்டது. புண்களில் இந்தச் சாற்றைப் பிழிந்துவிட்டால் கிருமித் தொற்று ஏற்பட்டு சீழ் பிடிக்காது என்று மருத்துவர்கள் நம்பினார்கள். நவீன மருந்துகள் வந்து இந்தச் வேலையைச் செய்யும் வரை வெங்காயம் அன்டி செப்டிக் ஆகப் பயன்படுத்தப்பட்டது.

வாயுக் கோளாறினால் ஏற்படும் வயிற்று வலி, உயர் இரத்த அழுத்தம், கொழுப்புத் தொந்தரவுகளுக்குக் கூட வெங்காயம் தீர்வு தரும். வெள்ளை வெங்காயத்துடன் இரண்டு ஸ்பூன் சர்க்கரையையும் ஒரு சிட்டிகை மஞ்சள் தூளும் கலந்து காலையிலும் மாலையிலும் சாப்பிட்டு வந்தால மஞ்சள் காமாலை குணமாகும்.

குழந்தைகள் உயரமாக வளரவில்லையே என்று கவலைப்படுகிறீர்களா? காலையில் சின்ன வெங்காயத்துடன் கொஞ்சம் கல் உப்புச் சேர்த்து அப்படியே குழந்தைகளைச் சாப்பிட சொல்லுங்கள். குழந்தை திடமாகவும் உயரமாகவும் வளரும். கிராமப் புறங்களில் காலை உணவாக பழைய சாதத்தில் உப்புப் போட்டு, வெங்காயம கடித்துக்கொண்டு சாப்பிடுவது வழக்கம். இதனால் அவர்கள் திடமாகவும், ஆரோக்கியமாகவும் உயரமாகவும் வளர்வார்கள் என்பது உண்மை.



வெங்காயத்தை இரண்டு மூன்று மிளகோடு பச்சையாகச் சாப்பிட்டால் காய்ச்சலின் சூடு தணியும். கடுமையான தலைவலி இருக்கும் போது வெங்காயத்தை அரைத்துப் பாதத்தில்

# தீர்க்கவல்ல வெங்காயம்

பற்றுப் போட்டால் தலைவலி உடனே சரியாகும். சிலருக்கு பஸ் பயணத்தில் வாந்தி வரும். அவர்கள் வெங்காயத்தை நசுக்கி அந்த வாசனையை நுகர்ந்தால் போதும் வாந்தி பறந்தோடிவிடும். மயக்கமாக விழுந்தவர்களுக்கு மயக்கததைத

**வெங்காயச்சாறு இதயத்துக்கும் இதம் தரும் மருந்து. வெங்காயச் சாற்றைத் தேனில் கலந்து குடித்தால் அது இதயத்தைச் சீராக்கும்.**

தெளியவைக்க வெங்காயத்தை நசுக்கி முகரச் செய்வதுண்டு.

சமையலில் தினமும் போதுமான அளவு வெங்காயத்தைச் சேர்த்துக்கொண்டால் பற்கள சேதமடைவதை அது தடுக்கும். சின்ன வெங்காயத்தை எண்ணெய்யில் வதக்கி கொஞ்சம் தண்ணீர் ஊற்றி வேக வைத்து உப்புச் சேர்த்துச் சாபபிட்டால் எத்தகைய வயிற்றுவலியும் உடனே பறந்து விடும்.

சிலருக்கு நல்ல கோடை வெயிலில் நீர்ச்சுருக்கு வந்து விடும். சிறுநீர்ப் பாதை முழுக்க உயிரே போகிறமாதிரி வலி ஏற்படும். இப்படியான சமயஙகளில் வெங்காயத்தைச் சிறுசிறு துண்டுகளாக அரிந்து தண்ணீரில் போட்டு கொதிக்கவைத்து அந்தத் தண்ணரைக் குடித்தால் நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு உடனே சரியாகும்.

மூல நோய்க்குவெங்காயம் சிறப்பான மருந்து. சின்ன வெங்காயம், பாசிப்பயறு, பொன்னாங்கண்ணக் கீரை மூன்றையும் சேர்த்துக் கூட்டுச் செய்து புழுங்கல் அரிசிச் சோற்றுடன் தொடர்ந்து 30 நாட்கள் சாப்பிட்டால் மூல நோய் மருநதின்றி குணமாகும. இரத்தப் போக்குடன் கூடிய மூலநோய்க்கு இது மிகச் சிறந்த மருந்தாகும. இந்த மருந்தைச் சாப்பிடும் முப்பது நாட்களும் நோயாளி தண்ணீருக்குப் பதில் மோர் மட்டுமே அருந்த வேண்டும்.

மூலநோய் உள்ளவர்கள் ஆசன வாயில் எரிச்சல், வலி போன்ற தொந்தரவுகளால் உட்காரவே முடியாது அவதிப்படுவதுண்டு. அவர்கள் வெங்காயச் சருகுகளை ஒரு சிறிய துணி உறையுள் போட்டு சின்ன சைஸ் தலையணை மாதிரி ஆக்கி வீட்டிலோ அலுவலகத்திலோ உட்காரும் நாற்காலியில் வைத்து அமாந்தால் எரிச்சல், வலி எல்லாமே இல்லாமல் போய்விடும்.

சூட்டுக் கட்டிகளுக்கும் வெங்காயமே மருந்து. உரித்த வெங்காயத்தின் மீது சாம்பலைக் கரைத்துப் பசை மாதிரிப் பூசவேண்டும். அதைக் கொழுக்கட்டை வேகவைப்பது மாதிரி ஆவியில் வேகவைக்க வேண்டும். வெந்தபின் அதை ஆறவைத்து அரைத்துக் கட்டிகள் மீது வைத் துக கட்டினால் சூட்டுக் கட்டிகள் பழுத்து உடனே உடைந்துவிடும்.

வெங்காயததைப் போதுமான அளவு அப்படியே கடித்து மென்று தின்று வந்தால் பெண்களுக்கு மாதவிடாய் கோளாறு சரியாகும்.

வெங்காயத்தை நசுக்கி எடுக்கப்படும் சாறும் மகிமை மிக்கது. காதுவலிக்கு இது அருமருந்து. ஒரு ஸ்பூன் வெங்காயச சாற்றுடன் அரை ஸ்பூன் தேன் கலந்து தினமும் இரண்டு வேளை இரண்டு சொட்டுக்கள் காதில் விட்டால் காதுவலி சரியாகிவீடும்.

வெங்காயச் சாற்றை தலையில் எண்ணெய் தடவுகிற மாதிரி தடவிக்குளித்தால் பேன்கள் ஒழியும். வெஙகாயச் சாற்றை இரண்டு வேளைக்கு ஒரு டீஸ்பூன் அளவு குடித்தால் வயிற்றில் இருக்கும் நாடாப்புழுக்கள் வெளி

**ஆயுள் வேத சாதனை**
**டாக்டர் ரவீந்திரன்**

யேறி வயிறு சுத்தமாகும்.

வெங்காயச் சாற்றுடன் சம அளவு சுத்தமான தேன் கலந்து தினமும் ஒரு ஸ்பூன் சாப்பிட்டு வந்தால் விந்தணுக்கள் வீரமாகும்.

ஜலதோஷத்தால் மூக்கு ஒழுகுவதற்கும் மூக்கில் இரத்தக்கசிவு இருப்பதற்கும் கூட வெங்காயச் சாறு உடனடி நிவாரணி. இரண்டு மூன்று சொட்டுக்கள் மூக்கில் விட்டால் இது உடனே சரியாகும்.

வெங்காயச் சாறு இதயத்துக்கும் இதம் தரும் மருந்து. வெங்காயச் சாற்றை தேனுடன் கலந்து குடித்தால் அது இதயத்தைச் சீராக்கும்.


வெங்காயத்தை நெய்யில் வதக்கி அப்படியே சாப்பிட்டால் அது உடற்சூட்டைத தணிக்கும். செரிமாணத்தையும், சீராக்கும். □

# மழை வருவதை சொல்லும் 'கிளிப்'

மேகம் கறுக்க ஆரம்பித்தவுடனேயே இன்று நல்ல மழை பொழியப் போகிறது என்று நம் மனது தானாகவே சொல்லி விடும். அதற்கேற்ப வெளியே செல்பவர்கள் குடை எடுத்துக்கொண்டு செல்வார்கள். அதைப்போல் கொடியில் துணி காயப்போட்டு இருக்கிறவர்களும் அவசர அவசரமாக துணிகள் எடுத்து விடுவார்கள்.

ஆனால் எந்தவிதமான அறிவிப்பும் இல்லாமல் சில நேரங்களில் மழை பெய்யத் தொடங்கி விடுகின்றது. இதைச் சற்றும் எதிர்பார்க்காதவர்கள் திணறித்தான் போவார்கள். சரி முன்கூட்டியே மழை வருவதைத் தெரிந்து கொள்வது எப்படி என்கிறீர்களா?

புருனல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆலிவர் மேக் கோர்தி என்னும் மாணவர் மழை வருவதை முன்கூட்டியே தெரிந்து கொள்ள புதிய வழிமுறையைக் கண்டறிந்துள்ளார். அது என்ன தெரியுமா?



சொன்னால் ஆசசரியப்பட்டு போவீர்கள். துணிகள் கீழே விழாமல் இருக்க பயன்படும் 'கிளிப்' தான் இவர் தனது கல்லூரி இறுதி ஆண்டு ஆய்வு அறிக் கைக்காக கிளிப் ஒன்றை உருவாக்கினார். அந்தக் கிளிப் சற்று வித்தியாசமானது. வானிலையில் ஏற்படக் கூடிய மாற்றம் காற்றழுத்தம் போன்றவற்றை மின் சைகைகள் மூலமாக வீட்டில் உள்ளவர்களுக்கு மழை வருவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னே தெரியப்படுத்தவிடும். அது மட்டுமில்லை. இந்தக் கிளிப் மழையில் இருந்து தன்னைத் தானே காத்துக் கொள்ளும் தறன்படைத்தது.

# வயிற்றுக் கொழுப்பை குறைக்க வழி என்ன?

நீரழிவு நோய் உள்ள பெண்கள் தங்களது வயிற்றை குறைக்க விரும்பும் பட்சத்தில் உடற்பயிற்சிதான் சிறந்த வழி. என்னதான் நல்ல சத்துள்ள ஆகாரங்கள் மற்றும் உணவுக் கட்டுப்பாட்டைப் பின்பற்றினாலும் உடல் இயக்கம் இல்லாவிட்டல் அடிவயிற்று சதையைக் குறைப்பது நிறைவேறாது.

அடிவயிற்றில் ஆழமாக உள்ள கொழுப்பைக் குறைக்க வேண்டுமானால் உடற்பயிற்சி அவசியம் செய்ய வேண்டும். அதென்ன அடிவயிற்றில் உள்ள கொழுப்புக்கு மட்டும் முக்கியம் கொடுக்கிறார்கள் என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா? விஷயம் இருக்கிறது.

அடிவயிற்றில் ஆழமாக காணப்படும் கொழுபபுக்கு Visceral fat என்று பெயர். இந்தக் கொழுப்பு உடலின் மற்ற இடங்களில் காணப்படும் கொழுப்புக்களை காட்டிலும் அதிக ஆபத்தானது. உடம்பின் எந்தவொரு தவறான இடத்திலும் சிறிதளவுக்கு கொழுப்பு சேர்ந்தால் கூட ஆபத்துதான. அந்த வகையில்



அடிவயிறுப் பகுதி உடல் நலனுக்கு கூடுதலாக ஆபத்தை ஏற்படுத்தும்.

இந்நிலையில் இந்த குறிப்பிடட கொழுப்பு உடற்பயிற்சிக்கு மட்டுமே கட்டுப்பட்டு குறையும. மற்றபடி தனியாக உணவுக் கட்டுப்பாடு மட்டும பலன் தராது. உடற்பயிற்சியை மட்டும் தனியாகவோ அல்லது கூடவே உணவுக் கட்டுப்பாட்டை பின்பற்றுவதன் மூலமாகவோ Visceral கொழுப்பைக் குறைக்க முடியும.

# பெண்கள் புகைப்பிடித்தால்...

இன்று ஆண்களுக்கு இணையாக பெணகளும் வந்துவிட்டதாலோ என்னவோ புகைப்பிடிப்பதலும் உங்களுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்று ஊதித்தள்ளுகிறார்கள்.

நகர்ப்புற பெண்கள் நாகரிக மோகத்தால் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளின் போது சிகரெட் புகைக்கிறார்கள். கிராமப்புறப் பெண்கள் பெரும்பாலும் சுருட்டு அல்லது பீடியைக் குடித்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்கிறார்களா.

சரி, பெண்கள் புகைப்பதால் அவர்களுக்கு உடல்ரீதியாக என்னென்ன பிரச்சினைகள் ஏற்படுகின்றன தெரியுமா?

ஆண்களைவிட 50 சதவீதம் பெண்களுக்கு மாரடைப்பு ஏற்பட வாய்ப் புணடு. நுரையீரல் கெட்டுப் போவதற்கு முக்கிய காரணமாக அமைகிறது. தவிர சிறு பருவத்தினருக்கு நுரையீரல் வளர்ச்சியைத் தடுக்கிறது. ஈஸ்ட்ரோஜன் உற்பத்தியளவில் மாறுதலை ஏற்படுத்தி மலட்டுத் தன்மையை உருவாக்குகின்றது.

நிரந்தரமாக மாதவிலக்கு நிற்கும் போது எலும்பின் வலிமையை வெகுவாக குறைத்துவிடுகிறது. ஒரு நாளைக்கு 20 சிகரெட்டோ, பீடியோ குடிப்பவர்களுக்கு மார்பக புற்றுநோய் விரைவிலேயே வந்து விடுகின்றது. இரத்தக் குழாய் அடைப்பு, பக்கவாதம், இதயநோய்கள் அதிக அளவில் ஏற்படவும் செய்யும்.

கருச்சிதையை உண்டாக்கும். இரத்தப் போக்கும் அதிகமாக இருக்கும். கர்ப்பத்தின்போது இரத்தக் கசிவை உருவாக்கி குறைப்பிரசவ குழந்தையைப பெற்றெடுக்க வழி செய்கிறது. இதனால் மூளை வளர்ச்சியில்லாத குழந்தைகள் பிறக்க வாய்ப்பு அதிகம். மேலும் கருக்குழாயில் தொற்று நோய்க்கிருமிகளை உருவாக்கி பிரசவத்தினபோது சிக்கலை அதிகரிக்கின்றது. ஆகவே, புகைப்பிடிக்கும் பெண்களே, புகையை விரட்டுவீர்களாக!

## நார்ச்சத்து

உணவில் சர்க்கரைக் குறைவுக்குப் போதுமான நார்ச்சத்து இல்லாததும் ஒரு காரணம். அதுமட்டுமல்ல, தொடர்ந்து நார்ச்சத்து சாப்பிடாவிட்டால் ஒரு நாள் கண்டிப்பாக நீரிழிவு நோய் தாக்கக்கூடிய அபாயமும் உண்டு. நார் அதிகமுள்ள பொருட்களை சாப்பிடுங்கள்.

## வேண்டாம் இந்தப் பழக்கம்

எதற்கெடுத்தாலும் மாத்திரை போட்டுக் கொள்கிறவர்கள் அதன் பக்க விளைவால் துன்பப்படுவார்கள். மாத்திரைகளை மருத்துவரின் பரிந்துரைப் படிதான் சாப்பிட வேண்டும். கடைகளில் வாங்கிச் சாப்பிட்டால் ஆபத்தாக முடியும்.

# சச்சின் 15

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

தேர்வுக் குழுவின் முடிவால் பெருத்த ஏமாற்றத்தில் இருந்த சச்சினை Grandstand எனும் வீடியோ சானல் பேட்டி எடுத்தது. அப்பாவித்தனமான முகமும் பெண்மை கலந்த குரலு மாக சச்சின் பேசியபோதும் அவனது வார்த்தைகளில் தன்னம்பிக்கை தெரிந்தது. எனக்கு வருத்தம் தான் ஆனாலும் நான் காத்திருக்கத் தயாராக இருக்கிறேன். எனக்கான வேளை வரும் என்று சொல்லாமல் சொன்னது அந்த நிதானமான பேட்டி.



சச்சினின் அந்தக் காத்திருப்பு, சீக்கிரத்திலேயே முடிவுக்கு வந்தது. 1989-90 ஆம் ஆண்டுக்கான இரானி கோப்பையில் டெல்லி அணிக்கு எதிராக அவன் ஆடிக்கொண்டிருந்த போது அந்த ஆண்டு இறுதியில் பாகிஸ்தான் செல்லும் இந்திய அணிக்கு அவன் தேர்வு செய்யப்பட்டான். மிக இளம் வயதில் இந்தியாவுக் காக விளையாடத் தேர்வான வீரன் சச்சின்தான்!

ஒரு கிரிக்கெற் வீரனின் வாழ்க்கையில் அவன் அடைய விரும்புகிற உச்சநிலை கௌரவம் ஒன்று உண்டென்றால் தனது நாட்டுக்காக டெஸ்ட் போட்டிகளில் விளையாடு வதைத்தான் சொல்வார்கள்! சச்சினை அந்த இணையற்ற கௌரவம் வந்து அடைந்த போது அவனுக்கு வயது பதி னாறுதான். சச்சினின் அண்ணன் அஜித் டெண்ல்கர் மற்றும் அவன் குடும்பம், பயிற்சியாளர் அச்ரேகர் உள்பட அனை வரும் இந்தச் செய்தியை உற்சாகமாக வரவேற்றுக் கொண் டாடினார்கள்!

ஆனால் சச்சினுக்கு இந்தச் சேதி சொல்லப்பட்டபோது அதன் சந்தோஷத்தை முழுமையாக அனுபவிக்க முடியாத படி அவனது அணி, இரானி கோப்பைக்கான போட்டியில் டெல்லி அணியிடம் சிக்கித் திணறிக்கொண்டிருந்தது. ஒரே நாளில் 555 ரன்கள் எடுத்தால்தான் வெற்றி என்கிற நிலைமை! கடினமான அந்தச் சூழலிலும் சச்சின் தனது இந்திய அணித் தேர்வைப் புதுமையான முறையில் கொண்டாடத் தீர்மானித் தான்.

மறு நாள் சச்சின் பேட் செய்யப் புகுந்ததும் அதிவேகத்தில் டெல்லியின் பந்து வீச் சாளர்களை அடித்துச் சாய்க்கலானான் . மறுமுனையில் விக்கெற்றுகள் மளமளவென்று சரிந்து கொண்டிருந்தபோதும் சச்சினின் வேகம் மட்டும் குறையவே இல்லை!

முக்கிய பேட்ஸ்மேன்கள் அனைவரும் ஆட்டமிழந்து விட்டதால் கடைசி நிலை பவுலர்க ளோடு விளையாடிக் கொண்டிருந்தான் சச்சின். அவர்களை பேட் செய்யவிடாமல் முடிந்தவரை காப்பாற்றி மெல்லமெல்ல ரன்களை ஏற்றியபோதும் அணியின் ஸ்கோர் இருநூற்று ஒன்பதாக இருந்த போது ஒன்பதாவது விக்கெற் விழுந்துவிட்டது. சச்சின் அப்போது 92 ரன்கள் சேர்த்திருந்தான். சதத்துக்கு இன்னும் எட்டு ரன்கள் பாக்கி.

பத்தாவது விக்கெற்றுகக் சச்சினோடு விளையாட மீதமிருப்பது பஞ்சாப்பைச் சேர்ந்த குர்சரண் சிங் மட்டும்தான். ஆனால் முதல் இன்னிங்ஸில் விளையாடியபோது காயம் பட்டுக் கொண்டதில் அவரது வலதுகை விரல் ஒன்று ஒடிந்திருந்தது. ஆகவே அவரால் பேட் செய்ய முடியாத நிலைமை. அவர் விளையாடாவிட்டால் சச்சினின் அணி முழுதும் ஆட்டமிழந்து விட்டதாக அறிவிக்கப்படும். சச்சினின் சதம் வெறும் கனவாகப் போய்விடுகிற சோகம்!

சச்சின் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்த ஏமாற்றத்தை ராஜ்சிங் துங்கர்பூர் பார்த்தார் . அன்று காலை முதல் அபாரமாக விளையாடிக்கொண்டிருந்த சச்சின் இந்த மேட்சில் நூறு ரன் களைப் பூர்த்தி செய்ய முடியாமல் போவது கொஞ்சமும் நியாயமில்லை என்று அவருக்குத் தோன்றியது. கைக்கட்டோடு ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த குர் சரணை விளையாடச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார் அவர். நீ பேட் செய்யவே வேணடாம். குர்சரண் சச்சினோடு எதிர்முனையில் சும்மா நின்றிருந்தால் போதும். மற்றதை அவன் பார்த்துக் கொள் வான்!



அதுவரை சச்சினின் அற்புதமான ஆட்டத்தைக் கண்டுகொள்ளாமல் ரசித்துக்கொண்டிருந்த குர் சரனும் அவனுக்காக இந்தச் சிறு சிரமத்தை ஏற்கத் தயாராயிருந்தார். வலது கையில் பேண்டேஜ் இடது கையில் மட்டும் கிளவுஸ் என்று அவர் விளையாடச் சென்ற போது சச்சின் நன்றி சொல்லக் கூட தோன் றாமல் நெகிழ்ந்து நின்றிருந்தான்.

தனது ஒற்றைக் கையாலேயே ஒன்றிரண்டு பந்துகளைத் தடுத்தாடினார் குர்சரண். அதற்குள் மறுமுனையில் சச்சின் தனது செஞ்சுரியை ஒரு பவுண்டரியின் மூலம் பூர்த்தி செய்ய ரஞ்சிக் கோப் பையைப் போலவே இரானிக் கோப்பையிலும் தான் விளையாடிய முதல் போட்டியிலேயே சதமடித்த சாதனை சச்சினைச் சேர்ந்தது . சச்சின் இந்திய அணிக்குத் தேர்வாகவும் அது ஒரு சரியான காரணமானது.

சச்சினை இந்திய அணிக்குத் தேர்வு செய்த குழுவில் ராஜசிங் துங்கர்பூர் புகழ் பெற்ற பேட்ஸ்மேன் குண்டப்பா விஸ்வநாத் , ரமேஷ் சக்ஸேனா, முன்னாள் இந்திய விக்கெற் காப்பாளர் நரேன் தம்ஹானே ஆகியோர் இருந் தார்கள். சச்சினை இந்த இளம் வயதில் பாகஸ்தான போன்ற வலுவான அணி யுடன் விளையாடச் செய் வதில் அவர்கள் எல்லோருக்கும் தயக்கமிருந்தாலும் அவனுடைய திறமை மேல் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைதான் சச்சின் தேர்வானதற்கு முக்கிய காரணமாயிருந்தது!

சச்சினைத் தேர்ந்தெடுத்தது நாங்கள் அனைவரும் ஒரு மனதாக எடுத்த முடிவுதான். ஆனால் சச்சின் அங்கே விளையாடச் சென்றபிறகும் நான் அவனுக்காக ஆண்டவனைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தது உண்மை. அப்போதும் உள்மனதில் ஏதோ ஒரு குரல் சச்சின் ஜெயிப்பான் என்று உறுதியாகச் சொல்லிக்கொண்டே இருந்தது என்கிறார் நரேன் தம்ஹானே. கிரிக்கெற்றுக்கு என்றே பிறந்தவன் சச்சின். அவனைப் போன்ற ஞானக் குழந் தைகள் எத்தனை சீக்கிரம் நாட்டுக்காக விளையாட ஆரம்பிக்கிறார்களோ அத்தனை நல்லது!

(தொடரும்)

## சுகாதார சேவை ஊழியர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சுகாதார சேவை ஊழியர் கூட்ட டமைப்பினர் கொழும்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டதாக சுகாதார சேவை கள் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் சமன் ரட்ணபிரிய தெரி வித்தார்.

கடந்த வரவு செலவுத் திட்டத் தில் முன்வைக்கப்பட்ட சம்பள உயர்வு உடனடியாக வழங்க வேண் டும் என்பதே இக் கோரிக்கைகளில் முதன்மையானதாகும்.

இந்த சம்பள உயர்வில் 50 வீதம் கடந்த டிசம்பர் மாதம் முதல் நடை முறைப்படுத்தப்பட்டதாகவும் மிகுதி 50 வீதம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப் படுமென்றும் முன்னர் உறுதியளிக் கப்பட்டிருந்தது.

ஆனால் மிகுதி 50 வீத சம்பள அதிகரிப்பு ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது அரசினால் அண் மையில் அதிகரிக்கப்பட்ட 40 வீத சம்பள அதிகரிப்பில் 20வீதம் மட் டுமே சுகாதார சேவை ஊழியர்க ளுக்கு வழங்கப்படுகின்றது. மூன் றாவது தகுதி வாய்ந்த ஒப்பந்த மற்றும் பதில் ஊழியர்கள் 5000 பேர் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கை களை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட் டம் நடத்தப்பட்டது.

அதேவேளை, சுகாதார சேவைக் கூட்டமைப்பு முன்வைக்கும் கோரிக்கை கள் ஆதாரமற்றவை என்றும் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)

## முஸ்லிம் கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவு

(கொழும்பு)

ஆறு கட்சிகளின் கூட்டிலான முஸ்லிம் ஐக்கிய கூட்டமைப்பு எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக் கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவளிக்கப்போவதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

முஸ்லிம் மக்களின் அபிலாஷை கள் பலவற்றிற்கு எழுத்துமூல அறி விப்பினை வழங்கியதன் அடிப்படை யிலே இவ் ஆதரவை வழங்குவதாக கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடக மாநாட்டில் கூட்டமைப்பின் தலைவர் ஹாவ்றூவ் நஸீர் அகமட் தெரிவித்துள்ளார். (ந-4)

## நாட்டின் பல பகுதிகளில் காற்றுடன் கூடிய மழை

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் ஏற்பட் டுள்ள தாழமுக்கத்தினால் நாட்டின் பல பகுதிகளிலும் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

இலங்கையைச் சூழவுள்ள வாயு மண்டலத்தில் குழப்பமான ஒரு நிலை காணப்படுவதினாலேயே இந்த தாழ முக்கம் ஏற்படுவதாகவும் வளிமண்டல வியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்எச்காரியவசம் தெரி வித்துள்ளார்.

மழை பெய்யக்கூடிய நேரத்தை குறிப் பிட்டுக் கூற முடியாது எனவும் எந்த வொரு நேரத்திலும் மழை பெய்யக் கூடும் எனவும் அவர் கூறினார்.

இடியுடன் கூடிய மழை பெய்து காற்று வசினால் கடல் அலைகள் கரைக்கு வரக்கூடும். எனினும் சுனாமி போன்ற பேரலைகள் ஏற்பட வாய்ப்பு இல்லை எனவும் எஸ்.எச்.காரிய வசம் தெரிவித்தார். (ச-8)

## காயமடைந்த போராளி கொழும்புக்கு


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதியில் உள்ள வவுண தீவுப் பகுதியில் இடம்பெற்ற தாக் குதலில் காயமடைந்த 3 விடுதலைப் புலி உறுப்பினர்களில் ஒருவர் நேற்று முன்தினம் முற்பகல் மேலதிக சிகிச் சைக்காக இலங்கை விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு ஊடாக கிளிநொச்சி வைத்திய சாலைக்கு போராளியை எடுத்துச் செல்ல மட்டக்களப்பு மாவட்டக்கட்டளைத் தளபதி கேணல் பானு நடவடிக்கை மேற்கொண்டார். ஆனால் உடனடி யாக போராளியை அழைத்துச் செல்ல இராணுவ உலங்குவானூர்தி அனுப்பி வைக்கப்படவில்லை.

காயமடைந்த போராளியை கிளி நொச்சிக்கு அழைத்துச்செல்ல இய லாது என்றும் கொழும்புக்கே அழைத் துச்செல்லமுடியும் என்றும் இரா ணுவ தரப்பினர் தெரிவித்தனர்.

இதையடுத்து நேற்று முன் தினம் காலை 10.20 மணியளவில் விமா னப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் போராளி கொழும் புக்குக் கொண்டுவரப்பட்டு கொழும் பில் உள்ள தனியார் வைத்திய சாலை ஒன்றில் அப்போராளி சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ ருடன் ஆண் தாதி ஒருவரும் கொழும் புக்குச் சென்றிருந்ததாகத் தெரிவிக் கப்படுகின்றது. (ந-4)




அண்மையில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்ற வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு நிகழ்வில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.க. திருநாவுக்கரசு உரையாற்றுவதையும் அருகே ஓய்வு பெற்ற அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய அதிபர் வ. செல் வராசா, மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி, பிரதம விருந் தினராக வ.பி.மா. சபை புனர்வாழ்வு , புனரமைப்பு சமூக நல அமைச்சின் செய லாளர் வி. செ. சுவாமிநாதன், கழகத் தலைவர் சி. குலசிங்கம், யாழ். செயலக கணக்காய்வு அத்தியட்சகர் க. கனகசிங்கம் ஆகி யோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காண்க.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு




1950இல் வடலூரில் நடைபெற இருந்த தூபி நீராட்டு விழா விற்குப் பாகவதரைக் கச்சேரி செய்ய அழைக்கும் பொருட்டு சென்னைக்குச் சென்றேன். அவர் அப்பொழுது ஹரிதாஸ் என்ற படத்தில் காதல் சீனில் நடித்துக்கொண்டிருந்தார். என்னைக் கண்டவுடன் திடுக்கிட்டு ஓடிவந்து வணங்கினார். நான், "ஏப்ரல் 24-ஆம் திகதி வடலூரில் தூபி நீராட்டு விழா. தாங்கள் வந்து கச்சேரி செய்யவேண்டும்'' என்றேன். அதனை அவர் வெகு மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு தூபி நீராட்டுவிழாவில் வந்து சமானமில்லாத உயர்ந்த முறையில் பாடி கூடியிருந்த மக்கள் சமுத்திரத்தை மகிழவைத்தார்.

1958இல் காங்கேய நல்லூரில் நடைபெற இருந்த கும்பாபிஷே கத்திற்கு வரவேண்டுமென்று அழைத்து, அவருடைய் நிதி நிலைமை அப்பொழுது நன்றாக இல்லாமையினால் 50ரூபாய் வழிச் செல வுக்குக் கொடுத்தேன்.

கும்பாபிஷேக சமயத்தில் அவர் கண் சிகிச்சைக்காகச் சென்னை சென்றிருந்தார். கும்பாபிஷேகத்திற்கு அவரால் வர இயலவில்லை. சென்னையிலிருந்து ஒருவரைக் காங்கேய நல்லூருக்கு அனுப்பியிருந்தார்.

அனுப்பப்பட்ட அவர் காங்கேய நல்லூரில் என்னைச் சந்தித்து, "சுவாமீ! பாகவதருக்குக் கண்சிகிச்சை நடந்துகொண்டிருக்கிறது. அவரால் கச்சேரிக்கு வர இயலவில்லை. தாங்கள் கொடுத்த 50 ரூபாயைத் தங்களிடம் கொடுத்து முருகன் பிரசாதம் வாங்கி வருமாறு என்னை அனுப்பினார்'' என்று கூறி என் கையில் 50ரூபாய் கொடுத்தார். தியாகராஜ பாகவதருடைய பெருந்தன்மையை நினைத்து என் உள்ளம் உருகியது. அவர் நலத்துக்காக முருகப் பெருமானை வேண்டி அருட்பிரசாதம் அனுப்பி வைத்தேன்.

திருச்சியில் பாகவதர் என்னைச் சந்தித்து "சுவாமி! தாங்கள் செய்த காங்கேய நல்லூர் கும்பாபிஷேகத்திற்கு வர இயலவில்லை. அதற்கு என்னை மன்னிக்கவேண்டும். இனி தாங்கள் எந்த ஊரில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்தாலும் நான் வந்து இலவசமாகப் பாடு வேன்'' என்று உள்ளம் உருகிக் கூறினார். இது பாகவ்தருடைய பண்பாட்டைப் புலப்படுத்துகின் றது.

### 10 விரிவுரையின் விளைவு

நான் மாதந்தோறும் மதுரையில் விரிவுரை புரிவது வழக்கம் மதுரையில் முனிசிபல் மனேஜரும் என் நண்பருமாகிய V.S.லோகநாதப்பிள்ளை அவர்களின் இல்லத்தில் தங்குவேன். மதுரையில் நீதிபதி A.S.P ஐயர், (இவர் மலையாளம்) பேச்சில் வல்லவர். மதுரையில் நடைபெறும் 'கல்ஸர் லீக்' என்ற சபையில் என்னை அழைத்து வந்து விரிவுரை செய்விக்குமாறு லோகநாதப் பிள்ளையைக் கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது அந்த நீதிபதி லோகநாதப் பிள்ளையைப் பார்த்து 'வாரியாரின் விரிவுரை 45 நிமிடத்திற்கு மேல் இருக்கக் கூடாது' என்றார். லோகநாதப் பிள்ளை அவரைப் பார்த்து 'வாரியார் சிறந்த பேச்சாளர், இன்னும் சிறிது நேரம் அதிகமாக இருந்தால் நன்றாக இருக்கும்' என்றார். நீதிபதி "எத்தனைப் பெரிய அறிஞராயினும் நேரம் அதிகம் எடுத்துக்கொள்ளக்கூடாது'' என்று கண்டித்துக் கூறினார்.

அன்று ஞாயிறு. லோகநாதப்பிள்ளை என்னைக் காரில் அழைத்துக்கொண்டு போகும் பொழுது, நீதிபதிக்கும் தனக்கும் நிகழ்ந்த உரையாடலைக் கூறி "ஐயா! நீதிபதி வாயால் "இன்னும் அரை மணி நேரம் பேசுங்கள்'' என்று சொல்ல வேண்டும். அப்படி அவர் சொல்லுகின்ற அளவிற்கு உங்கள் பேச்சின் திறம் இருக்கவேண்டும். அப்படிப் பேசினால் தான் தங்களை நான் சிறப்பாகக் கருதுவேன்'' என்றார்.

நீதிபதி தலைமையில் விரிவுரை தொடங்கியது. நான் பக்தி என்னும் பொருள் பற்றிப் பேசினேன். அங்கிருந்தோர் அனைவரும் அறிஞர்கள். அதனால் பேச்சு மிகவும் உயர்வாக அமைந்திருந்தது. 45 நிமிடம் முடிந்தவுடன் என் பேச்சு முடிவு பெற்றது. நீதிபதி எழுந்து என்னைப் பார்த்து "இன்னும் 1/2 மணிநேரம் பேசவேண்டும்'' என்று என்னைக் கேட்டுக்கொண்டார். நான் லோகநாதப்பிள்ளையைப் பார்த்து கண் இமைத்தேன். அவர் என்னைப் பார்த்து புன்முறுவல் பூத்தார். பிறகு 1/2 மணிநேரம் பேசினேன். நீதிபதி தான் பின்னுரையில் "வாரியார் வாக்கு கங்கா ஜலம் போல பெருக்கெடுத்து ஓடுகின்றது. மிக உயர்ந்த தத்துவ முத்துக்கள் அவர் வாக்கிலிருந்து உதிர்கின்றன'' என்று பாராட்டிப் பேசினார்.

### 11. பகுத்தறிவாளரின் பாராட்டு

வேலூரில் என்னுடைய தொடர் விரிவுரை நடைபெற்றுக்கொண்டிருந்தது. முனிசிபல் மண்டபத்தில் பார்திதாசன் (புரட்சிக் கவிஞர்) அவர்கள் தலைமையில் தமிழர் முன்னேற்றக் கூட்டம் நடைபெற இருந்தது. சில அன்பர்கள் அந்த நிகழ்ச்சியில் நான் பேச வேண்டுமென்று அழைத்துக்கொண்டு சென்றார்கள். நான் ஒருவன்தான் திருநீறு பூசிக்கொண்டும், உருத்திராட்சமாலை அணிந்துகொண்டும் சென்றேன். பாரதிதாசன் என்னைக்கண்டு இவர் புராணப் பிரசங்கியாயிற்றே! இவருக்கு ஆழ்ந்த கருத்து என்ன தெரியும்? என்று அலட்சியமாகக் கருதினார். அவர் முன்னுரை கூறி என்னை 1/2மணி நேரத்துக்கு மேல் ஒரு நிமிடமும் பேசக்கூடாது. இன்னும் பலர் பேச இருக்கிறார்கள். ஆதலால் என் பேச்சு சுருக்கமாக இருக்க வேண்டுமென்று கூறினார்.

நான் கெடியாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு செந்தமிழ் என்னும் தலைப்பில் பேசத் தொடங்கினேன். செம் என்னும் சிறப்பு அடைமொழி தமிழ்மொழி ஒன்றுக்குத் தான் உண்டு. பிற எந்த மொழிகளுக்கும் இல்லை என்று ஆராய்ச்சி பூர்வமாகவும், ஆதார பூர்வமாகவும் அணி அணியான நுட்பக் கருத்துக்களைச் சொல்மாரியாகப் பொழிந்தேன். சபையோர்கள் மகிழ்ச்சியினால் பலமுறை கரகோஷம் கொடுத்து ஆரவாரம் செய்தார்கள். தலைமை பூண்டிருந்த பாரதிதாசன் வாயைப் பிளந்துகொண்டு என்னைப் பார்த்துப் பெரிதும் ரசித்துக்கொண்டிருந்தார்.

நான் "தலைவர் எனக்குக் கொடுத்த நேரம் 30நிமிடம், இப்பொழுது 28நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 2நிமிடத்தில் முடித்துக்கொள்வேன்'' என்றேன்.

உடனே தலைவர் எழுந்து என்னை ஆலிங்கனம் செய்துகொண்டு "இன்னும் 1/2 மணி நேரம் பேசவேண்டும். இது வரையில் 'செம்' என்னும் பதத்திற்குத் தான் உரை நிகழ்த்தினீர் கள். "தமிழ்'' என்பது பற்றிப் பேசுங்கள், நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய கருத்துக்கள் பல தங்களிடம் இருக்கின்றன'' என்று கூறினார். பின்னர் நான் 1/2மணி நேரம் தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துப் பேசினேன். தலைவர் முடிவுரையில் இவரை நான் "புராணப் பிரசங்கியாயிற்றே! வெறும் புராணக் கதைகளைத்தான் பேசுவார் என்னு எண்ணி ஏமாந்தேன். நுண்மாண் தமிழ்க் களஞ்சிய நூலறிஞர் என்பதை இப்பொழுது கண்டு வியந்தேன்'' என்று பாராட்டி முடிவுரை கூறினார்.

### 12. சக்ரவாகம்

மதுரையில் வடக்காடி வீதியில் திருப்புகழ் மண்டபத்தில் ஒருமுறை நான் விரிவுரை செய்து கொண்டிருந்தேன். வைகுண்டம் ஐயர் என்பவர் பிடில் வாசித்துக் கொண்டிருந்தார். நான் சூரிய காந்தம் என்ற ராகம்படினேன். அவர் சக்ரவாகம் என்ற ராகத்தை வாசித்தார். சூரியகாந்தம் 17வது மேளகர்த்தா. காகலி நிஷாதத்தை உடையது. சக்ரவாகம் 16வது மேளகர்த்தா. கைசிகி நிஷாதத்தை உடையது. எனவே சூரிய காந்தத்திற்கும் சக்ரவாகத்திற்கும் நிஷாதத்தில் தான் வேற்றுமை உண்டு.

(தொடரும்)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் தரம்-5 புலமைப் பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கனிமொழி சுதானந்தாரசா -166, திவ்ஜா ஜெனானந்தராசா -156, சோபனா பாலகுமார் -154, பிரணவி ஸ்ரீதரன் -153, ஜனனி சிவகரன் -151, சரண்யா சோமேஸ்வரன் -149, பிரதீபா சந்திரசேகர் -147, வைஷ்ணவி தங்கராஜா -146, சாரங்கா சபாநாயகம் -145, ஜனனி சடாட்சர ஜோதி -145, சுபித்திரா சிவசுப்பிரமணியம் -143, சாம்பவி சிறீதர் -142, துளசிகா ரவீந்திரன் -142, கஜனாராயணி செல்வரட்ணம் -141, லோகிதா யோகேந்திரன் -139,

சிந்துஷா ரவீந்திரன் -138, கீர்த்தனா காசிலிங்கம் -137, சத்தியா சிவானந்தராசா -137, சுதர்சிகா சுந்தரலிங்கம் -137, யாழினி ராஜேந்திரன் -137, இமாஜினி செல்வராஜா -136, விதுஷா ஜெயக்குமார் -136, ஸ்ரீவித்தியா கணேசன் -135, நித்தியாரணி ஸ்ரீதரன் -135, தனுஷா அமிர்தலிங்கம் -135, ஜனனிகா ரதீஸ்வரன் -134, தாட்சாயினி பாலகிருஷ்ணன் -134, டலுக்ஷனா அன்பழகன் -132, தமிழினி நடராஜா -132, சோபிகாசினி ஸ்ரீபதி -131, அர்ச்சனா சிவராஜா -130,

சைலா மகேந்திரன் -130, டுவாரகா ஞானசேகரம் -130, பகீரதி பரமானந்தம் -129, நிரஞ்சனா கந்தசாமி -129, பவித்திரா குணரட்ணம் -127, துஷ்யந்தி கந்தசாமி -127, ஸ்ரீதரா வரதராஜா -126, கௌசல்யா தியாகராஜா -126, கனிஸ்ரா அரசரட்ணம் -125, சூரியப்பிரியா பாஸ்கரன் -125, மதுஜினி பாலச்சந்திரன் -125, லக்சியா ரகுநாதன் -124, மதுரா வீரசிங்கம் -124, நிஷாந்தினி ஆனந்தசிங்கம் -124, சர்மிலி ராஜேந்திரன் -124, சுஜீபா முத்துலிங்கம் -124, ஆரணி தங்கராஜா -124.

(ந-19)









கொக்குவில் பிரம்படிப் பகுதியில் கடந்த 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 18 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று பிரம்படியில் அமைந்துள்ள நினைவுத் தூபியடியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சி.விஜயரூபன் ஆகியோர் உரையாற்றுவதையும், நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். படங்கள்:- ஞா.ஐங்கரன்

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அன்பளிப்பு

ஆறுமுக நாவலரால் 1872ஆம் ஆண்டு கட்டப்பட்ட கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் அமைந்துள்ள காணியில் அப்பாடசாலை ஆரம்பமான காலத்திலிருந்து மழைக்காலங்களில் 2 அடி உயரத்துக்குத் தண்ணீர் தேங்கி நின்று பாடசாலைச் செயற்பாட்டுக்கு பலவிதங்களிலும் இடைஞ்சல் விளைவித்துக்கொண்டிருந்தது.

மழை நீர் தேங்கி நிற்காது அக் காணியை மண்போட்டு உயர்த்துவதற்கு அப்பாடசாலைச் சமூகம் பலவிதமான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் எவ்வித பயனும் ஏற்படாத நிலையில் கடைசி முயற்சியாக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தை அணுகியபோது, அந் நிறுவனம் பாடசாலை மாணவர்களது நிலையை அவதானித்து பாடசாலைக் காணியை நிரப்புவதற்காக 500 டிராக்டர் மண்ணை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இன்றைய சந்தைப் பெறுமதியின் படி ஒரு டிராக்டர் மண் ரூபா 500 ஆகும்.

பாடசாலைச் சமூகத்தின் வேண்டுகோளுக்கிணங்க இப் பேருதவியைச் செய்த சிறுவர் பாதுகாப்பு நிதியத்துக்கு பாடசாலைச் சமூகமும், அப்பகுதி பொதுமக்களும் மாணவர்களது பெற்றோரும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(து)

சத்தியம் யாருக்கும் எக்காலத்தும் துன்பம் தந்ததில்லை தவறாகவும் அறியாமையுடன் வாழ்பவன்தான் உண்மையில் கஷ்டப்படுவான். -மாக்கஸ்-

வலம்புரி

# கதைத்துக் கதைத்து காலம் கடத்திய ஜனாதிபதி

இலங்கை அரசியல் யாப்புக்கமைய இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் முடிவதற்கு இன்னமும் இரண்டு மாதங்களே இருக்கின்றன.

அவர் ஜனாதிபதியாக வருவதற்காக இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலை சந்தித்தவர். அந்தத் தேர்தல் பிரசாரத்தின் போது இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாண்பேன். விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்துவேன் என்றெல்லாம் கூறியிருந்தார்.

அவரின் பேச்சில் நம்பிக்கை கொண்ட மக்கள் அவரை ஜனாதிபதியாக்குவதென தீர்மானித்தனர்.

எனினும் மக்களின் நம்பிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்பதாக அவர் நடந்து கொண்டார்.

சமாதானப் பேச்சு, அதிகாரப்பகிர்வு என்றெல்லாம் கூறிய அவர் எதனையுமே செய்யவில்லை. தேர்தல் பிரசாரங்களில் அவர் கூறியதெல்லாம் வெறும் பேச்சென்பதை அவரின் பதவிக்கால முடிவிலாவது அப்பாவிப் பொதுமக்கள் புரிந்துகொண்டிருப்பர்.

இதில் ஆச்சரியம் என்னவெனில், பிரதமர் மகிந்தவை எதிர்த்த ஜனாதிபதி இப்போது ஒரே மேடையில் அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்கிறார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ- ஜே.வி.பியுடன் உடன்படிக்கை செய்தபோது அதனை எதிர்ப்பதாக கூறிய ஜனாதிபதி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மகிந்தவை அனுமதிப்பதில்லை என்றவாறு கூறியிருந்தார்.

பிரதமர் மகிந்த ஜே.வி.பியுடன் உடன்படிக்கை செய்துகொண்டமை, அந்த உடன்படிக்கையின் பிரகாரம் அரசும் விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை ரத்துச்செய்தல் என்ற விடயங்களை கடுமையாக எதிர்ப்பதுபோல ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காட்டிக்கொண்டார்.

இதனை அவரின் உண்மையான எதிர்ப்பாகவே மக்கள் கருதினர். இனப்பிரச்சினைக்கு பேச்சு, அதிகாரப்பரவலாக்கல் மூலம் தீர்வு என்று கடந்த 11 வருடங்களாக மக்களை ஏமாற்றிய ஜனாதிபதியின் சுயரூபத்தை அறியாத மக்கள் மகிந்தவின் விடயத்திலும் ஜனாதிபதியின் வாக்கை நம்பினர்.

ஆனால் ஜனாதிபதி மகிந்த பற்றி கூறியதெல்லாம் வெறும் நடிப்பென்பதை அவரின் தற்போதைய தேர்தல் பிரசாரம் உறுதிசெய்துவிட்டது.

ஆம், பொதுக்கட்டமைப்பை ரத்துச்செய்யும் ஜே.வி.பியின் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரசாரம் செய்கிறார் எனில்-பேச்சு மூலம் அதிகார பரவலின் அடிப்படையில் தீர்வுஎனக்கூறுகிறார் எனில் அவரை இனியும் நம்புவது அறியாமையின் வெளிப்பாடாகவே இருக்கமுடியும்.

முதலாம் பக்கத்தொடர்ச்சி...

# அரசுடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்க...

நாங்கள் எந்த இடத்திலும் எந்த மேடையிலும் பேச்சுக்குத் தயாரென அறிவித்திருந்தோம். எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை, தளம பலும் இல்லை உறுதியாகவுள்ளோம். இந் நிலைப்பாட்டை இன்றைய சந்திப்பில் எமது தேசியத் தலைவர் அவர்கள் வலியுறுத்தும் படிகூறியிருந்தார். நோர்வே தரப்புக்கு நாம் மீ ண்டும் வலியுறுத்தியுள்ளோம்.

இவ்வாறு நோர்வே சிறப்புத் தூதுவருடனான சந்திப்பின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழீ ழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

## நேற்றைய சந்திப்பு

இன்றைய சந்திப்பில் முக்கியமாக யுத்தநிறுத்த சூழல் நெருக்கடி நிலைமைகளை அடைந்து கொண்டிருக்கிறது. நெருக்கடிச் சூழலை மாற்றியமைத்து ஒரு உறுதிப்பான நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்பதுதான் நோர்வே தரப்பின் நிலைப்பாடாக இருக்கிறது.

யுத்தநிறுத்த சூழலை பலப்படுத்தும் நோக்கோடுதான் நோர்வேயின் சிறப்புத் தூதுவரின் பயணம் அமைந்தது. தற்போதைய களநிலைமைகளை நாம் எடுத்து விளக்கியுள்ளோம். தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கொலைகள், வன்முறைகள் தொடர்பாகவும் எடுத்து விளக்கியுள்ளோம். மிகமோசமாக கொலைகளும், வன்முறைகளும் அதிகரித்துள்ளன போராளிகளின் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக போராளிகளை எமது கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குள் அழைத்துக் கொண்ட சூழலில் ஆயுதக்குழுக்களின் வெறியாட்டம் அதிகரித்துள்ளன.

இந் நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து யுத்த சூழலை பலப்படுத்திக் கொள்வதன் அவசியத்தன்மையை நாம் தெளிவாக விளக்கியுள்ளோம்.

## நோர்வே நிலைப்பாடு

நோர்வே தரப்பின் நிலைப்பாடாக இரண்டு தரப்பும் நேரடியாகப் பேசி ஒரு முடிவுக்கு வருவதுதான் நல்லதெனவும் அப்படியானதொரு சூழல் உருவாகப் படவேண்டும் எனத் தெரிவித்தனர்.

அதற்கு நாமும் எமது நிலைப்பாட்டை தெளிவாக்கினோம். அதாவது நோர்வே வெளியுறவு அமைச்சருடைய வேண்டுகோளின் அடிப்படையில் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் தயாரென எமது தேசியத்தலைவர் அவர்கள் அறிவித்திருந்தார். நோர்வே தரப்பினுடைய முயற்சிக்கும் அனுசரணைக்கும் நாங்கள் மதிப்பளித்து எமது தேசியத் தலைவர் அவர்களால் உடனடியாக எமது முடிவு அறிவிக்கப்பட்டது.

நாங்கள் எந்த இடத்திலும் எந்த மேடையிலும் பேச்சுக்குத்தயாரென அறிவித்திருந்தோம். எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை,தளம்பலும் இல்லை உறுதியாகவுள்ளோம். இந்நிலைப்பாட்டை இன்றைய சந்திப்பில் எமது தேசியத்தலைவர் அவர்கள் வலியுறுத்தும்படி கூறியிருந்தார்.

நோர்வே தரப்புக்கு நாம் மீ ண்டும் வலியுறுத்தியுள்ளோம். யுத்த நிறுத்த அமுலாக்கம் பற்றிய பேச்சுக்களை எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் நாம் பங்கு கொள்ள தயாராகவுள்ளோம். ஒரு நடுநிலையான இடத்தை தெரிவு செய்து பேச்சுக்கள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

இன்றைய சந்திப்பில் அரசதரப்பிலிருந்து எந்த வித ஆலோசனைகளும் எமக்கு அனுப்பிவைக்கப் படவில்லை. நோர்வேயினுடைய வேண்டுகோள்களையும், ஆலோசனைகளையுமே முன்வைத்தார்கள் இரண்டு தரப்பும் பேச்சுமேடைக்கு வரவேண்டுமென்றும் இருதரப்பும் நேரடியாக சந்தித்து கலந்துரையாடி யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றிய நடைமுறைகளை பலப்படுத்த வேண்டுமென்பது நோர்வேயின் ஆலோசனையாக இருந்தது. நோர்வே தரப்புக்கு எமது தலைமைப் பீ டத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம்.

## தேர்தலுக்கு முன்னர் பேச்சுக்கள்

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பேச்சுக்கள் இடம்பெறுமா என்பது பற்றிய எந்த விதமான ஊகங்களையும் வெளியிட முடியாது. ஏனெனில் எந்த விடயங்களிலும் இரு தரப்பு என்பதில் நாம் ஒரு தரப்பு. நாம் நினைப்பதெல்லாம் நடந்துவிடுதில்லை.

அரச தரப்பினுடைய இணக்கப்பாடும், ஒத்துழைப்பும் தேவை. அரசதரப்பிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைக்காதவிடத்து நாம் எதுவும் கூறமுடியாது. நோர்வே தரப்பு இருதரப்பையும் பேச்சுக்கு கொண்டு வரவேண்டுமென்பதிலும் சமாதான முயற்சிகள் பலப்படுத்த வேண்டுமென்பதிலும் மிகவும் ஆர்வமாகவும், உறுதியாகவும் உழைக்கின்றார்கள் என்றார்.

## ஆயுதக்குழுக்களை களையாவிட்டால்...

இன்றைய சந்திப்பிலே ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் பற்றியே நாம் விரிவாக நோர்வே தரப்புக்கு விளக்கினோம். யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படை விதிமுறைகளில் அதுவும் ஒன்று. 1.8சரத்தில் மிகத் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்த உடன்பாட்டு அமுலாக்கத்தில் தமிழர் தாயப்பிரதேசத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஆயுதக்குழுக்கள் கலைக்கப்பட்டு ஆயுதம் களையப்பட்டு எமது தாயக பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்படவேண்டும் என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் அண்மைக் காலத்தில் ஆயுதக்குழுக்கள் ஆயுதமயப்படுத்தப்பட்டு எமது தாயக பிரதேசத்தின் அனைத்து பகுதிகளிலும் வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள். பொதுமக்கள், போராளிகள், ஆதவாளர்கள் எல்லோர் மீ தும் ஆயுதக்குழுக்கள் தாக்குதலை தொடுப்பதில் தீ விரமாக இறங்கியுள்ளார்கள்.

இலங்கையரசு தம்மிடம் ஆயுதக்குழுக்கள் எதுவும் இல்லையென மறுத்த நிலையிலும் கண்காணிப்புக்குழுக்கூட இராணுவ ஆக்கிரமிப்பு பகுதியில் ஆயுக்குழுக்களின் நடமாட்டம் உள்ளதை உறுதிப்படுத்தியுள்ளது.

இந் நிலையில் படைகளின் தளபதி தம்மிடம் ஆயுதக் குழுக்கள் இல்லையெனவும், ஆயுதக்குழுக்களை கலைத்துவிட்டோம் என அறிக்கை விட்ட மறுநாளே மட்டக்களப்பில் எமது போராளிகள் மீ து ஆயுதக்குழுக்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. தாக்குதலை மேற்கொண்டு விட்டு இராணுவ காவலரண்களின் பகுதிகளுக்குள்ளேயே உள்நுழைந்துள்ளார்கள்.

அச் சம்பவத்தை ஆதாரமாக எடுத்துக் கூறியுள்ளோம். அண்மையில் நடத்த கொலைகளைப் பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளோம். ஆகவே யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளை இருதரப்புக்களும் நடைமுறைப்படுத்தா விட்டால் தொடர்ந்து யுத்தநிறுத்த சூழலை தொடர்ந்து பேணக்கூடிய சூழல் இருக்கா தென்பதையும் போர் நிறுத்த உடன்பாட்டின்படி ஒரு தரப்பு என்ற வகையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

முதலில் நாம் வழிபடவேண்டிய தெய்வங்கள் நம் நாட்டு மக்கள்தான். ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்வதையும் ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படுவதையும் விட்டு முதலில் நாம் நம் மக்களை வழிபடுவோம். இதை செய்யாமல் இருந்தால் ஏற்பட்ட கொடிய தீவினையால் நாம் துன்பப்பட்டு வருகிறோம். அப்படி இருந்தும் நம் கண்கள் இன்னும் திறந்த பாடில்லை.

சுவாமி விவேகானந்தர்

# பண்ணைப் பாலத்தினூடான போக்குவரத்துகள் நாளை முதல் இரு வாரங்களுக்கு இடைநிறுத்தம்

## படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

பண்ணைப்பாலம் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளதால் யாழ்ப்பாணம்-தீவு பகுதிக்கான பண்ணைப்பாலத்தினூடான போக் குவரத்துகள் நாளை முதல் இரு வாரங்க ளுக்கு இடை நிறுத்தப்படவுள்ளன.

இதன்போது, தீவுப்பகுதிக்கான போக் குவரத்துக்கு படகுகள் சேவையில் ஈடுபடுத் தப்படவுள்ளன. பண்ணைப்பாலம் புனர மைக்கப்படும் காலப்பகுதியில் சேவையில் ஈடுபட செய்யப்பட்ட மாற்றுப்போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பில் கடந்த 5ஆம் திகதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் வருமாறு,

பண்ணைப்பாலத்தினூடாக போக் குவரத்துக்கு படகுகள் சேவையில் ஈடுபடுத் தப்படும். பொதிகளை ஏற்றுவதற்கு விசேட படகுகள் ஒழுங்கு செய்யப்படும் என்பதுடன் கர்ப்பிணிகள், நோயாளர்களின் அவசர தேவைகளுக்கென இரவு நேரங்களில் பயன் படுத்துவதற்கென ஒரு படகு பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்படும். படகுகளில் பயணி களை ஏற்றி இறக்கும் இடத்தை நேரில்பார்வை யிட்டு முடிவு எடுக்கப்படும்.

★ இப்படகுச் சேவையின் போது பிரயாணி கள் இலவசமாகச் செல்லக்கூடிய விதத்தில் இதற்கான கட்டணச் செலவு ஒப்பந்தகாரரால் பொறுப்பேற்கப்படும். மேலதிகப்பொருட்கள் பொதிகளுடன் வருபவர்கள் அதற்கான கட் டணத்தைச் செலுத்தவேண்டும்.

★ பண்ணைப்பாலத்திற்கு அப்பால் ஊர் காவற்றுறைப் பகுதிக்கான சேவைக்கென 4.இ.போ.ச. பேருந்துகள் சேவை யில் ஈடு படுத்தப்படும் இதற்கான எரிபொருள் வேல ணையில் களஞ்சியப்படுத்தப்படும்.

★ இ.போ.ச. பேருந்துகளின் சேவையின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் ஏற்க னவே அதற்கென ஒதுக்கப்பட்ட நேரஅட்ட வணையின்படி அவை சேவையில் ஈடுபடுத் தப்படும். அத்துடன் தனியார் மினிபஸ்களும் வழமையான நேர அட்டவணை யின்படி சேவையில் ஈடுபடும். தேவை ஏற்படும் பட் சத்தில் மாற்றம் செய்யப்படும்.இதன்படி பண் ணைப்பாலத்தின் இரு பக்கங் களிலிருந்தும் காலை 6 மணிக்கு சேவை ஆரம்பிக் கப்படும்.

★ பாலத்திற்கு அப்பால் தீவுப்பகுதியில் சேவையில் ஈடுபடும் இறுதி இ.போ.ச. பேருந்து மாலை 7 மணிக்கு பண்ணைப் பாலப்பகுதிக்கு வந்தடையவேண்டும்.

★ குறிகட்டுவான் வரை செல்லும் இறுதி இ.போ.ச. பேருந்து பெருங்குளப்பகுதியில் தரித்து விடப்படும்.

★ தற்போது தீவுப்பகுதியில் சேவையில் ஈடுபட்டுவரும் 20 தனியார் மினிபஸ்களும் பாலத்தின் இருபகுதிகளுக்கும் பிரித்து விடப்பட்டு சேவையில் ஈடுபடும்.

★ எழுவைதீவு, அனலைதீவு மக்களின் நலன் கருதி அம் மக்களை கல்லுண் டாய்வழியாக கடற்படையின் அனுமதியுடன் விடுவதற்கு ஒழுங்கு செய்யப்படும்

★ .பாலம் புனரமைப்பதற்கு தேவையான பொருட்களை அவ் விடத்திற்கு சிரமமின்றி கொண்டு செல்வதற்கு சம்பந்தப் பட்ட தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

★ இவ்வாறு படகுச்சேவை மூலம் மேற் கொள்ளப்படும் பிரயாண ஒழுங்குகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத் தர்கள் மேற்பார்வை செய்வதற்கு ஒழுங்கு செய்யப்ப்டும் (ற)

## புலமைப்பரீட்சையில் முதலிடம் பெற்ற மாணவன்

(யாழ்ப்பாணம்)



5ஆம் தரப் புலமைப்பரீட்சை யில் தமிழ் மொழி மூலம் தோற் றிய மாணவர்களில் அகில இலங்கை ரீதியில் யாழ்.ஜோன் பொஸ்கோ வித்தியால மாண வன் செல்வன் பேரானந்தராஜா டினேசன் முதலிடம் பெற்றுள் ளார்.

இவர் பெற்றுக்கொண்ட மொத்தப்புள்ளிகள் 176. கவின் கலையில் அதீத ஈடுபாடு கொண்ட மாணவன் டினேசன் யாழ்.தேசியக் கல்வியற் கல்லூரி மற்றும் யாழ்.மாநகர சபை நடாத்திய சித்திரப் போட்டிகளில் முதலாவது இடத் தைப் பெற்றுக்கொண்டார்.

அண்மையில் நல்லூர் பிர தேச செயலகம் நடத்திய கலாசார விழாவில் நாட்டார் பாடல் இசை யில் முதலிடம் பெற்றுக்கொண் டமையும் குறிப்பிடத் தக்கது.

இளவாலை சித்திரமேளியை சொந்த இடமாகக் கொண்ட மாணவன் டினேசன் யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் டாக்டர் பேரானந்தராஜா ஜமுனா மலர் தம்பதிகளின் புதல்வர் என்பது குறிப் பிடத் தக்கது. (ந)

## பிற்போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

இன்று தொடக்கம் மூன்று நாட்கள் நடை பெறவிருந்த பாட ஆசிரியர்களுக்கான செயல் அமர்வுகள் ,விஞ்ஞானக் கண்காட்சி என்பன பிற்போடப்பட்டுள்ளதாகவும் மேற் படி செயல்அமர்வுகள் நடைபெறும் தினங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தீவகக் கல்வி வலய பிரதிக்கல்வி கல்விப்பணிப் பாளர் வ.இராதாக்கிருஷ்ணன் அறிவித்து ள்ளார். (அ)

## யாழ்.குடாநாட்டுப்...

மணி நேரம் வீதி மறியல் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் அவ்வீதியூடான போக்கு வரத்துகள் தடைப்பட்டிருந்தன. யாழ்குடாநாட்டுக்கல்வியியலாளர்கள் கொலை செய்யப்படுவதை கண்டித்து எதிர்வரும் 19 ஆம் திகதி வரை வகுப்பு பகிஷ்கரிப்புப் போராட் டத்தில் ஈடுபடுவதற்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ச-19.51)

## அதிபர்...

அன்னாரது இல்லத்தில் நடை பெற்றன. இவ்விறுதிக்கிரியையில் அமரர் சிவகடாட் சத்திற்கு நாட்டுப்பற்றாளர் விருதினை வழங்கி கௌரவித்தும் தமிழீழ தேசியக்கொடி யினை போர்த்தியும், யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அஞ்சலி செலுத்தினார்.பின்னர் மாலை 3மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் அவரது உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கு பாடசாலைக் கொடி போர்த்தப்பட்டது.

பின்னர் அங்கு அஞ்சலி நிகழ்வுகள் பாட சாலை உப அதிபர் திருமதி கயிலைமகான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்க ளான கஜேந்திரன், சிவநேசன், ஈழவேந்தன் ஆகியோரும் யாழ்.வலயக்கல்விப்பணிப் பாளர் செல்வரட்ணம் , யாழ்.வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் வரதராஜா , யாழ்.கோட்ட கல்வி அதிகாரி எஸ்.தங்கராஜா , நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் கே.வி.குல சேகரம் , இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், கோப்பாய் கிறிஸ்தவக்கல் லூரி பழைய மாணவர் சங்கத்தலைவர் நா. சுந்தரலிங்கம் , யாழ்.மாவட்ட மாணவர் ஒன் றியத்தலைவர் புலேந்திரன், யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் சார்பாக புருசோத் மனன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் , மாணவர்கள் சார்பாகவும் ஏனைய பாடசாலை அதிபர்கள் சார்பாகவும் பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து ஆசிரி யர்கள், மாணவர்கள் ,பொதுமக்கள் பூதவுட லுக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர். பின்னர் பூதவுடல் பாண்ட் வாத் திய இசையுடன் மாணவர்கள் . ஆசிரியர்கள். புடை சூழ அவரது பூதவுடல் எடுத்துச் செல் லப்பட்டு கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (ச-19. 37)

## அரசுடன் நேரடிப்பேச்சுக்களை...

மிக அர்ப்பணிப்போடு இருக்கின் றோம். இலங்கைப் படைகளையும் அரசையும் யுத்த நிறுத்த உடன்பாட்டை பேணும் விடயத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதை இன்றைய சந் திப்பில் வலியுறுத்தியிருந்தோம் எனத் தெரிவித்தார்.

### அரசின் பொய்ப்பிரசாரம்

அண்மைக்காலமாக சர்வதேச சமூகத் தின் மத்தியில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பாகவும் தமிழீழ விடு தலைப்புலிகள் தொடர்பாகவும் எதிரான பிரசாரங்களை அரசு முன்னெடுத்து வரு கின்றது. மிகத்தவறான கருத்துகளை பரப்பு வதில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இதை இன்றைய சந்திப்பில் சுட்டிக் காட்டினோம். எமது தலைமைப்பீடத்தின் உறுதியான தெளிவான நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துமாறு வலியுறுத்தினோம். தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை பேணுவதில் அர்ப்பணிப்போடும் உறுதியாகவும் இருக் கிறார்கள் என்பதை சர்வதேச சமூகத்திடம் தெரிவிக்குமாறு கூறினோம்.

அரசுதான் ய்த்த நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிப்பதை தட்டிக்கழித்துக் கொண்டு உலக அளவில் எங்களுக்கு எதிரான பிர சாரத்தை கட்டவிழ்த்துக் கொண்டு இருக் கிறது. இதுவே இன்றைய நிலைமை என தெரியப் படுத்தினோம்.

ஐரோப்பிய நாடுகள் எமது அதிகார பூர்வமான பயணங்களை வரவேற்பதில்லை என்று தெரிவித்துள்ளார்கள். எங்கள் தரப்பின் உண்மை நிலைகளை விளக்கு வதற்காக கதவுகள் திறக்கப்பட வேண்டும்.

இரண்டு தரப்பினது உண்மை நிலை களை அவர்கள் தெளிவாகப்புரிந்து கொண்டு நியாயமான நடுநிலையான நிலைப் பாடு களை ஐரோப்பிய ஒன்றியம் எடுக்க வேண் டும் என்று நோர்வேத் தரப்பிடம் கேட்டுக் கொண்டோம். இதை நோர்வேத் தரப்பு ஐரோப்பிய ஒன்றியத்திடம் விளக்க முயற்சிக்க வேண்டும்.எங்களுடைய மக்களுடைய உணர்வுகளை அபிலாசைகளை உணர்ந்து கொண்டே ஐரோப்பிய ஒன்றியம் உரிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்ற எங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினோம் எனத் தமிழ்ச்செல்வன் கூறினார்.

### தேர்தல் பற்றி பேசவில்லை.

ஜனாதிபதி தேர்தல் பற்றி எதுவும் நாங்கள் பேசவில்லை. நிறைவேற்று அதிகா ரம் கொண்ட ஜனாதிபதியின் பூரண கட்டுப் பாட்டின் கீழ்த்தான் அரசு மற்றும் அரசு படைகள் இருக்கின்றன.

அதனால் அவர்கள் தான் இன்றைய நிலைமைகளைச் சீர்படுத்த வேண்டும். இத் தேர்தல் தொடர்பாக எங்கள் மக்கள் என்ன கருதுகிறார்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை தேர்தல் நடைவடிக்களில் உள்ள வர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் நாங்கள் எதுவும் செல்வதற்கு இல்லை.

தமிழீழ நிர்வாகப் பிரதேசத்துக்குள் தேர் தல் நடைவடிக்கைகளை மேற்கொள் ளுவ தற்காக எமது சோதனைச் சாவடிகளைக் கடந்து தான் வரவேண்டும் என்பது உண்மை. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி இரு கட்டுப் பாட்டுப் பிரதேசங்கள் மற்றும் எல்லைக் கோடுகளும் வரையறுக்கப்பட்டுள்ளன.

இன்னொரு தேசத்தில் இருந்து வரு பவர்கள் மற்றொருவரது கட்டுப்பாட்டுப் பிர தேசத்துக்குள் நுழைவதற்கான சில கட்டுப் பாடுகள் உள்ளன. அது யுத்த நிறுத்த ஒப்பந் தத்தில் கூறப்பட்டுள்ளது. அதற்கமைய கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் நிர்வாகத் தலைமையிடம் அனுமதி பெற வேண்டும்; தொடர்புகொள்ள வேண்டும். அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்றார் தமிழ்ச்செல்வன். (ச)

## வண.பிதா...

எமது சமூகம் அவ்வளவு தூரம் சாது வானதாய் சமூகக்கட்டுப்பாட்டிலும் பண் பாட்டிலும் உயர்ந்திருந்தது. அவர் அதை நன்கு அறிந்திருந்தார். ஆம் போரும் ஆயுதக்கலாசாரமும் ஆரம்பிப்பதற்கு முற் பட்டகாலத்தில் எமது சமூகத்திலே ஒரு கொலை நடந்தாலே அது பெரிய எழுத் துக்களில் தலைப்புச் செய்தியாக நாளி தல்களில் பிரசுரிக்கப்படும். பல இடங்களிலும் பல நாட்களுக்கு அது புதினச் செய்தியா கவே பேசப்படும். அவ்வளவுக்கு அரிதாகவே கொலை இடம்பெற்றது. தொடர்ச்சியாக சில ஆண்டுகளிலே ஒரு கொலை கூட இடம் பெறாத காலப்பகுதியாக அது இருந்தது.

இப்போதைய நிலையைப் பார்க்கும் போது உயிர் எவ்வளவு மலிவாக மதிக்கப் படுகிறது. ஒவ்வொரு நாளும் தினத்தாள் களில் எதிர்பார்க்கக் கூடிய செய்தியாக கொலைகள் அதிகரித்துவிட்டன. எமது சிறிய சமூகத்தை ஒரு புறம் போர் அழித் தது. இன்னொரு புறம் சுனாமிப் பேரலை அழித்தது. அது போதாது போன்று நம்மையே நாம் அழித்துக் கொண்டிருக்கிறோம்!

இந்நிலை ஏற்படுவதற்கு பொறுப்பான காரணிகள் பல உள்ளன. 'இது இவையள்... அது அவையள்' என்று பார்க்காது 'மனிதம்' என்ற அடிப்படையிலே காரணிகளும் முழுச் சமூகமும் இணைந்து இந்த நச்சு வட்டத்திற்கு மாற்று வழி காணவேண்டும். இது மிகவும் அவசரமான ஒரு தேவை யாகுமென அவர் வேண்டுகோள் விடுத்துள் ளார். (ச)


தேசிய மொழி ஆய்வு மையத்தின்

இலவச ஆங்கிலம்

இலவச தொலைக்கல்விப்பாட நெறி

சுயவிபரத்தினை அனுப்பி பதிவுசெய்யலாம்

NLRC,Sampath Bank 1st Flr
198, Galle Road, Dehiwala

மனோகரா யாழ்.

பார்த்திபன் . லட்சுமிராய். வடிவேல்

நடித்த



குண்டக்க மண்டக்க...

கா.நே.10.30.02.30.06.30.09.30(பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

சரத்குமார். வைகைப்புயல் வடிவேலு

நமீதா நடித்த

சாணக்கியா

காட்சி நேரம்:

10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம் .லைலா. விவேக்

நாசர் மற்றும் பலர் நடித்த

தில்

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.